கல்வெட்டு

KALVETTU

திருவள்ளுவராண்டு 2036 (பார்த்திப ஆண்டு) ஐப்பசித் திங்கள்

பவுனி - பழங்கால இசைக்கருவி
பொம்மிடி, தர்மபுரி மாவட்டம்

கல்வெட்டு - காலாண்டிதழ் : 68 (அக்டோபர் 2005) விலை ரூ. 10.00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே.....

	பக்கம்
பதிப்புரை	1
1. வரலாறு கூறும் பழங்காலப் பொருட்கள் - தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப.	2
2. நிர்மால்யத் தொட்டிக்கல்வெட்டு - சொ. சந்திரவாணன்	8
3. குதிரை குத்திப்பட்டான் நடுகல் கல்வெட்டு - நாக. கணேசன்	10
4. நாகூர் திருவாசல் கல்வெட்டு - இர. ஜெயராமன்	12
5. தரங்கம்பாடி ஓலை ஆவணங்களால் அறியப்படும் தொழில்கள் - இரா. சிவானந்தம்	14
6. Early day's sailing Vessels and Navigation - K.R.A. Narasiah	20
7. பவுனி - எழுத்துப்பொறித்த இசைக்கருவி - ச. செல்வராஜ்	24
8. நெடும்பிறை - பெருங்கற்கால ஈமத்தாழிகள் - து. துளசிராமன்	27
9. கல்திட்டை - கட்டடக்கலையின் தோற்றுவாய் - தி. சுப்பிரமணியன்	29
10. பழவேற்காடு - ச. கிருஷ்ணமூர்த்தி	34
11. தரங்கம்பாடி வணிகர்கள் - சீ. இராமச்சந்திரன்	38

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை சிறப்பு ஆணையர் திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப., அவர்கள் சார்பாகச் சிறப்பு நிலைக் காப்பாட்சிய திரு. து. துளசிராமன் அவர்களால் வெளியிடப்பெற்றது.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்,
தொல்லியல் துறை.

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஹால்ஸ் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.
14-11-2005

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை தமிழக வரலாற்றுலகிற்கு சிறப்பாக சேவை செய்து வருகிறது. அகழாய்வு மற்றும் கல்வெட்டாய்வுப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு அப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. அதனால் தமிழகத்தின் கற்காலம் முதல் அண்மைக்காலம் வரையிலான வரலாற்றைத் தெளிவாக அறிவதற்குப் பல அடிப்படைச் சான்றுகள் கிடைத்து வருகின்றன.

அப்புதிய சான்றுகளின் அடிப்படையில் துறை அலுவலர்களால் ஆய்வுக்கட்டுரைகள் எழுதப்படுகின்றன. அவை இத்துறையின் வெளியீடான ''கல்வெட்டு'' காலாண்டிதழில் வெளியிடப்படுகின்றன. அக்கட்டுரைகள் தமிழ் ஆர்வலர்களுக்கும், வரலாற்று ஆய்வாளர்களுக்கும் சிறப்பான செய்திகளை அள்ளித்தருகின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவ்வகையில் தற்போது வெளியிடப்படும் 68-ஆம் இதழில் 11 கட்டுரைகளும், துணுக்குச் செய்திகளும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் தமிழகத்தின் வரலாறு கூறும் பழங்கால பொருட்கள் குறித்த கட்டுரையும், பழங்காலத்தில் கப்பல்களும், கடற்பயணமும் என்ற கட்டுரையும், பவுனி எனப்படும் பண்டைய இசைக்கருவியை குறிக்கும் கட்டுரையும் குறிப்பிடத் தக்கவை. ஆய்வுக் கண்ணோட்டத்துடன் வெளியிடப்படும் இக்கட்டுரைகளை படித்து வரலாற்று ஆய்வாளர்களும், ஆய்வு மாணவர்களும், தமிழ் ஆர்வலர்களும் பயனுற வேண்டும் என்பதே எனது ஆவல்.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,
பதிப்பாசிரியர்

1 வரலாறு கூறும் பழங்காலப் பொருட்கள்

தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையர்

பண்டைய நாகரிகத்தின் பல்வேறு கூறுபாடுகளை வெளிக் கொணர்ந்து ஆய்வு செய்வதே தொல்லியல் துறையின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் தொல்லியல் துறையின் பணிகளாக வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுகள் ஆய்வு, தொன்மைச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு, வரலாற்றுச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாத்தல், அகழாய்வில் கிடைக்கும் தொல்பொருட்களை மக்களும், மாணவர்களும் கண்டு பயனடையக் காட்சியகங்கள் அமைத்தல், தொல்லியல் ஆய்வுகளை நூல்களாக வெளியிடுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. Archaeology - Archaeo : என்றால் தொன்மை என்று பொருள். Logy : என்றால் அது குறித்த படிப்பாகும். எனவே மனித இனம் பயன் படுத்திய தொல்பொருட்களைக் கொண்டு மனித வரலாற்றை ஆய்வு செய்வதனை Archaeology என அழைக்கிறோம்.

இந்தியத் திருநாட்டின் வரலாறு தொன்மையானது. பல்வேறு பகுதிகளில் கிடைக்கும் புராதனப் பொருட்கள் அவ்வப்பகுதியின் வரலாற்றை எடுத்துக் கூறுகின்றன. புராதனப் பொருட்கள் என்றால் வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப்பொருட்களாகும். உதாரணமாக உலகப் புகழ்பெற்ற சிந்துசமவெளி நாகரிகத்தின் கூறுகளை பூமிக்கடியிலிருந்து வெளிப்படுத்தியதால் அவற்றை நாம் அறிந்தோம். இதே போன்று பீகார் மாநிலத்தில் இருந்த நாளந்தா பல்கலைக்கழகத்தின் சுவடுகளை அங்கு வெளிப்பட்ட புராதனப் பொருட்களால் அறிகிறோம். இது போன்று பல இடங்களில் பூமிக்கடியிலிருந்து கிடைத்த புராதனப் பொருட்களால் நம் சமுதாயத்தின் பல்வேறு காலப் பண்பாட்டினை அறிய முடிகிறது.

இதேபோன்று தமிழகத்திலும் பல்வேறு தொல்லியல் ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. ஆய்வுகளில் கிடைக்கப் பெற்ற இச்சான்றுகள் தமிழகத்தின் தொன்மை - பண்பாடு - சமுதாய வாழ்க்கை நிலை பற்றித் தெரிந்து கொள்ள உதவுகின்றன.

ஒரு பகுதியின் வரலாற்றினை எடுத்துக் கூறும் சான்றுகளாக (Source materials) கல்வெட்டுகள், காசுகள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள், செப்புத் திருமேனிகள், ஓவியங்கள், பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் ஆகியவை விளங்குகின்றன. இவை வழங்கும் வரலாற்றுச் செய்திகள் ஏராளம்.

பண்டைய வரலாறு கற்காலத்திலிருந்து தொடங்குகிறது. எழுத்தினை அறியாத காலத்தை வரலாற்றுக்கு முந்தைய காலம் என அழைக்கிறோம். வரலாற்றுக்கு முந்தைய கால (Pre-Historic) மனிதன் வாழ்ந்த இடம் ஒன்று சென்னைக்கு அருகிலே உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி நீர்த் தேக்கத்திற்கு அருகில் உள்ள 'குடியம்' என்ற இடத்தில் கற்கால மனிதன் வாழ்ந்த இயற்கையான குகை உள்ளது. அருகே அத்திரம்பாக்கம் என்ற இடத்திலுள்ள ஆற்றின் படுகைகளில் கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் கிடைக்கின்றன. இங்கும் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

கற்கால மனிதனுக்கு எழுதத் தெரியாவிட்டாலும் தனது எண்ணங்களை ஓவியமாகப் படைத்தான். தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் அருகே கீழ்வாலை, செத்தவரை, ஆலம்பாடி நாயனூர், பாடியேந்தல், கொல்லூர் ஆகிய இடங்களிலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மல்லப்பாடி, மல்லசந்திரம், நீலகிரியில் கரிக்கியூர், மற்றும் திண்டுக்கல், கோயமுத்தூர், மதுரை, வேலூர் மாவட்டங்களிலும் பல கற்கால ஓவியங்கள் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்வதை மத்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழகத் தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், மற்றும் தஞ்சைச் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவை மேற்கொண்டு, தமிழக வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பல அரிய வரலாற்றுப் பொருட்களை வெளிப்படுத்தி வருகின்றன. தமிழ்நாட்டில் 90-க்கும் மேற்பட்ட இடங்கள் அகழ்ந்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இதில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 27 இடங்களில் அகழாய்வுப் பணியினை மேற்கொண்டது. வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய இடங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க கொற்கை, கரூர், திருக்கோயிலூர், தொண்டி, கங்கைகொண்டசோழபுரம், பழையாறை, சேந்தமங்கலம், படவேடு, கண்ணனூர், பாஞ்சாலங்குறிச்சி போன்ற இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அண்மையில் தர்மபுரி மாவட்டம், மோதூர் என்ற ஊரில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அகழாய்வினை மேற்கொண்டது. மோதூர் மலைச்சரிவில் அகழாய்வினை மேற்கொண்டபோது புதிய கற்காலக் கருவிகள் அதிக அளவில் கிடைத்தன. மலையின் அடிவாரத்தில் அகழாய்வினை மேற்கொண்ட பொழுது பெருங்கற்கால - இரும்புகாலப் பொருட்கள் கிடைத்தன. பின்னர் இம்மலையை விட்டுச் சற்றுத்தள்ளி சமவெளியில் அகழாய்வு செய்த பொழுது மக்கள் பயன்படுத்திய கல்

மணிகள், வழிபாடு செய்த சுடுமண் பொம்மைகள், சங்கு வளையல் துண்டுகள், பானைகள் போன்றவை கிடைத்தன. இங்கு கிடைத்த பழங்காலப் பொருட்கள் மூலம் மனிதன் தனது வாழ்க்கையில் காலப் போக்கில் பல மாற்றங்களுடன் முன்னேறி வந்திருப்பதை உணர முடிகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆறு கடலோடு கடக்கும் இடத்தில் அழகன்குளம் என்ற ஊரில் ஆய்வு மேற்கொண்டபொழுது தமிழகம் ரோமானிய நாட்டுடன் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புக்கு ஆதாரமாக, ரோமானியக் காசு, மத்திய தரைக்கடல் பகுதி பானை ஓடுகள், ரோமானிய மதுஜாடிகளின் பகுதிகள், பண்டைய தமிழ் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் போன்றவை கிடைத்துள்ளன. அழகன்குளம் பற்றிய சங்க இலக்கியக் குறிப்புகள் ஏதும் காணப்படா விடினும் அங்கு கிடைத்த புராதனப் பொருட்கள் மூலம் அவ்வூர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு சிறந்த வணிக நகரமாகத் திகழ்ந்ததை அறிய முடிகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் வட்டத்தில் 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள 'ஆண்டிப்பட்டி' என்ற ஊரில் எம் துறை அகழாய்வினை மேற்கொண்டது. இவ்வூரில் 1968-ஆம் ஆண்டு தமிழக வரலாற்றுக்கு முக்கியத்துவம் வாய்ந்த 143 ஈயக்காசுகள் புதையலாகக் கிடைத்தன. இதில் ஒரு பக்கம் இரு மலைக்குன்றுகளுக்கு இடையே ஆறு செல்வது போல காட்டப்பட்டுள்ளது. மறுபக்கம் 'அதின்னன் எதிரான் சேந்தன்' என்ற தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்பும் அங்குசமும் காணப்படுகின்றது. சங்க காலக் காசுகளில் எழுத்துப் பொறிப்போடு உள்ள காசுகளில் இவை முதன்மையானதாகும். சேந்தன் என்ற குறுநில மன்னனால் இக்காசுகள் வெளியிடப்பட்டிருக்கலாம். சங்க இலக்கியமான 'மலைப்படுகடாம்' என்ற நூலில் செங்கம் என்ற ஊரின் சிறப்பு கூறப் படுகிறது. மேலும் இப்பகுதியில் காணப்படும் நடுகற்களின் மூலமும் இப்பகுதியின் வரலாற்றை நம்மால் உணரமுடிகிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்கதான ஆண்டிப்பட்டியில் அகழாய்வு மேற்கொண்டபோது இரும்புக் காலப் பானை ஓடுகள், தமிழ் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், வண்ணக் கல் மணிகள், ரோமானியப் பானை ஓடுகள், இரும்பு உருக்குவதற்கு ஏற்ற அமைப்புகள், சுடுமண் பொம்மைகள் போன்றவை கிடைத்துள்ளன. இவை ஒரு காலத்தில் ஆண்டிப்பட்டி சிறந்த வணிகத் தலமாக விளங்கியதை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளன.

பொதுவாக அகழாய்வு செய்யும் பொழுது மண் அடுக்குகளில் கிடைக்கும் தொல்பொருட்களை அதனுடன் கிடைக்கும் மற்ற காலம்

நிர்ணயம் செய்யப்பட்ட பொருட்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து காலத்தைக் கணிக்கும் முறை மேற்கொள்ளப்படுகிறது. தொல் பொருட்கள், அதாவது, எலும்பு, மரத்துண்டுகள், கரித்துண்டுகள் ஆகியவை கார்பன் - 14 என்ற அறிவியல் முறை அடிப்படையில் காலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் பண்டைய காலப் பானை ஓடுகளை தர்மோலுமினிசென்ஸ் (Thermoluminescence) என்ற அறிவியல் முறையிலும் துல்லியமாகக் காலத்தைக் கணிக்க முடிகிறது.

இவ்வாறு அகழாய்வில் கிடைக்கும் பழங்காலப் பொருட்கள் வழியே அப்பகுதியின் வரலாற்றுச் சிறப்பினை உணர முடிகிறது. அகழாய்வில் கிடைத்த பழங்காலப் பொருட்களைப் பொதுமக்களும், மாணவர்களும் கண்டு அவற்றின் சிறப்பை உணர வேண்டும் என்னும் நோக்கில் தொல்லியல் துறை அகழாய்வு நடத்திய இடத்தின் அருகிலேயே தொல் பொருட்களைக் காட்சிப்படுத்தி அகழ்வைப்பகம் என்ற காட்சியகத் தினை அமைத்துள்ளது. தொல்லியல் துறை கீழ் 14 அகழ்வைப்பகங்கள் அமைந்துள்ளன. வரலாற்றுச் சிறப்புமிக்கப் பூம்புகாரில், கடல் கொண்ட பூம்புகார்ப் பகுதியினை ஆழ்கடல் ஆய்வு மூலம் ஆய்வு செய்து அதன்மூலம் கிடைத்த பொருட்கள் மற்றும் அப்பகுதியிலிருந்து சேகரித்த தொல்பொருட்கள் பூம்புகார் அகழ்வைப்பகத்தில் அனை வருக்கும் பயன்படும் வகையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதைத்தவிர ஊர்ஊராகச் சென்று வரலாற்றுச் சிறப்புமிக்க பொருட்கள், ஓலைச்சுவடிகள், சிற்பங்கள் போன்றவற்றைச் சேகரிக்கும் பணியில் தொல்லியல் அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஓலைச் சுவடிகளினால் அப்பகுதியில் இருந்த இலக்கியங்கள், மருத்துவமுறை, சொல்வழக்கு, நடைமுறை வழக்கு போன்றவற்றை அறிய முடிகிறது.

தொன்மையான வரலாற்றைக் கூறும் கலைப்பொருட்கள் இந்நாட்டின் அரிய செல்வமாகும். இதன் மீது ஈடுபாடு கொண்டு வெளி நாடுகளுக்கு அவற்றைக் கடத்திச் சென்று விடாமல் தடுப்பதற்காக மத்திய அரசு 'தொல்பொருள் பதிவுச் சட்டம்' என்ற ஒரு சட்டத்தினை இயற்றியுள்ளது. இதன்கீழ் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழங்கலைப் பொருட்களை தொல்லியல் துறையில் பதிவு செய்து, சான்றிதழ் உரிமை யாளருக்கு வழங்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பல இடங்களில் வழிபாடு இல்லாமல் இடிந்த நிலையில் உள்ள கோயில்கள், கோட்டைகள், அரண்மனைகள், நெற் களஞ்சியம், குளம் - கிணறு, பண்டைய கல்வெட்டுகள் போன்றவை அளிக்கும் வரலாற்றுச் செய்திகள் ஏராளம். உதாரணமாக தரங்கம்பாடி கோட்டை, தஞ்சை அரண்மனை, மதுரை திருமலை நாயக்கர்

அரண்மனை, மனோரா, பாபநாசம் நெற்களஞ்சியம், திருவெள்ளறை மாற்பிடுகு பெருங்கிணறு போன்ற 88 சின்னங்களைத் தமிழ்நாடு அரசு வரலாற்றுச் சின்னங்களாக அறிவித்துத் தொன்மை மாறாமல் அவற்றைப் போற்றிப் பாதுகாத்து வரும் பணியினை மேற்கொண்டு வருகிறது. அண்மையில் 11வது நிதிக்குழு அளித்த நிதி உதவியைக் கொண்டு 26 வரலாற்றுச் சின்னங்களில் முதற்கட்டமாகப் பாதுகாக்கும் பணி மேற் கொள்ளப்பட்டது.

தமிழக வரலாற்றுக்கு முக்கிய ஆதாரமாக விளங்குவது கல்வெட்டுகள். கோயில்கள், பாறைகள் போன்றவற்றில் கல்லில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம். இக்கல்வெட்டு களுள் தமிழ்-பிராமி எழுத்து, வட்டெழுத்து, தமிழ், கிரந்தம், நாகரி எழுத்துகளிலும், தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்திய மொழிகளிலும் காணப்படுகின்றன. தமிழகத்தில் சுமார் 22,000க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன. கல்வெட்டுகள் அளிக்கும் செய்திகளின் வழியே பண்டைய ஊராட்சி முறை, ஏரி - குளம் பராமரிப்பு, நிலங்கள் - வேளாண்மை மேற்கொண்டது போன்ற பல அரிய செய்திகளை அறிந்து கொள்கிறோம். நாட்டை ஆண்ட மன்னர்களின் ஆட்சி முறை பற்றியும் அறிய உதவுகிறது.

உதாரணமாக, திருக்கோயிலூர் அருகே உள்ள ஜம்பை என்ற ஊரில் மலைக்குன்றில் காணப்படும் 'ஸதியபுதோ அதியந் நெடுமான் அஞ்சி ஈத்தபாழி' என்ற பொறிப்புடன் பிராமி கல்வெட்டு ஒன்று காணப் படுகிறது. அசோகனின் நான்கு கல்வெட்டுகளில் 'சதியபுத' என்ற பெயர் சுட்டப்படுகின்றது. ஜம்பையில் கண்டறியப்பட்ட கல்வெட்டு சத்தியபுத்திரர்கள் என்பவர்கள் அதியமான்கள் என்று ஆணித்தரமாக எடுத்துக்காட்டுகிறது. தமிழக வரலாற்றில் முக்கியமானது ஜம்பைக் கல்வெட்டாகும். இதுபோன்ற கல்வெட்டுகள் பல இடங்களில் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றது.

கல்வெட்டுகளின் வரலாற்றுச் சிறப்பினை, முக்கியத்துவத்தை உணராத பலர் அவற்றின் மீது சுண்ணாம்பு, வர்ணம் பூசி வரலாற்றை மறைத்து விடுகின்றனர். பலர் பாறைகளை வெட்டும் பொழுது கல்வெட்டினையும் உடைத்து விடுகின்றனர். இதனால் பல அரிய வரலாற்றுச் சான்றுகளை நாம் இழந்து விடுகிறோம், எனவே இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து, தொல்லியல் துறை கல்வெட்டுப் படியெடுக்கும் முனைப்புத் திட்டத்தினை மேற்கொண்டு கடந்த ஓராண்டில் சுமார் 5000 கல்வெட்டுகளுக்கு மேல் படியெடுத்துள்ளது. இதனால் வரலாற்று ஆதாரமான கல்வெட்டுகள் அழிவின்றிக் காக்கப் படுகின்றன.

இதே போன்று பண்டைய நாளில் ஒரு கோயிலுக்கோ அல்லது ஒரு காரியத்திற்காகவோ அளிக்கப்படுகின்ற விபரங்கள் செப்பு தகட்டிலும் பொறிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படும். இதனை 'செப்பேடு' எனக் கூறுவர். கோயில்கள், மடங்கள் மற்றும் தனியார் வசமும் உள்ள இச்செப்பேடுகளும் பல அரிய வரலாற்றுச் செய்திகளை அள்ளித் தருகின்றன.

இவ்வாறு தொன்மைச் சிறப்புமிக்க தமிழ்நாட்டில் பூமிக்கடியிலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க புராதன-கலைப்பொருட்கள் கிடைத்து வருகின்றன. இவற்றை முறையாக ஆய்வு செய்தும், முன்பு இதே போன்று கிடைத்த பொருட்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தும் ஆய்வு செய்தால், தமிழக வரலாறு மேலும் பொலிவுறும்.

** 09.07.2005 அன்று சென்னை அகில இந்திய வானொலியில் துறையின் சிறப்பு ஆணையர் ஆற்றிய உரை.*

கோவை மாவட்டத்தில் புதியகற்காலக் கருவி கண்டுபிடிப்பு

கொங்கு நாட்டில் புதியகற்காலக் கருவிகள் போளுவாம்பட்டி, ஆனைமலை போன்ற ஊர்களில் ஏற்கெனவே கிடைத்துள்ளன. தற்போது புதியதாக வெள்ளெருக்கம் பாளையம் வேட்டைக்காரன் மலை அடிவாரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கோவையிலிருந்து மேற்கே சுமார் 25 கி.மீ. தூரத்தில் வெள்ளெருக்கம்பாளையம் உள்ளது. இவ்வூரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் வேட்டைக்காரன் மலை உள்ளது. இம்மலை மேற்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகும். இதன் அடிப்பகுதி நிலப் பரப்பை உள்ளூர் மக்கள் ''காரைஊத்திக்காடு'' என்று அழைக் கின்றனர். இம்மலையின் மேல் உள்ள குகையில் தொல்பழங்கால ஓவியங்கள் உள்ளன. இந்த மலையடிவாரத்தில் வேட்டைக்காரன் கோயில் என்று அழைக்கப்படும் கிராமதேவதை கோயில் ஒன்று உள்ளது. இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் கள ஆய்வில் புதிய கற்காலக் கைக்கோடரி (Celt) ஒன்று கிடைத்தது. இக்கருவி 12 செ.மீ. நீளமும் ஒரு பகுதி 5 செ.மீ. அகலமும் மற்றொரு பகுதி கூர்மையாகவும் உள்ளது. இக்கருவி வழுவழுப்பாகவும், மெருகூட்டப்பட்டும் உள்ளது.

பெ. கௌதமபுத்திரன்,
தொல்லியல் அலுவலர்,
கோயம்புத்தூர்.

2

நிர்மால்யத் தொட்டிக் கல்வெட்டு

சொ. சந்திரவாணன்
காப்பாட்சியர், குற்றாலம்

கல்வெட்டு முனைப்புத்திட்டத்தின் கீழ் பழைய இராமநாத புரம் மாவட்டத்தில் கல்வெட்டுகள் படியெடுக்கும் பணி நடை பெற்று வருகின்றது. அதில் தற்போதைய சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம் கண்டதேவி சரகத்தில் 'நென்மேனி' என்ற சிற்றூர் அமைந்துள்ளது. இங்குள்ள சிவன் கோயில் மக்களால் அருள்மிகு வன்மீக நாத சுவாமி கோயில் என்று அழைக்கப் படுகின்றது. ஆனால் இங்குள்ள கல்வெட்டுக்களில் 'பெரம்பூர் நாட்டு நென்மலி உலக நாத ஈசுவரமுடையார் கோயில்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோயிலில் மொத்தம் எட்டுக் கல்வெட்டுகள் புதிதாகக் கண்டறியப்பட்டன. அவற்றுள் சிறப்பிடம் பெறுவது 'நிர்மால்யத் தொட்டிக் கல்வெட்டு' ஆகும்.

'நிர்மலன்' என்பது இறைவனுக்குரிய பெயர். நிர்மலன் என்ற சொல்லுக்கு 'மாசற்றவன்' என்பது பொருளாகும். நிர்மலன் என்ற இச்சொல்வழக்கு கல்வெட்டுகளில் அப்படியே கையாளப் பட்டதை அறிய முடிகிறது.

'நிர்மலன் கோயிற் குடதிசை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். (S.I,I Vol XIII Ins. 93)

நிர்மலனாம் இறைவனுக்குப் பூசித்துக்கழித்த பொருட்கள் 'நிர்மால்யம்' என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றது. நிர்மால்யம் என்ற சொல்லிற்கும் பூசித்துக் கழித்த பொருள் என்றே அகராதிகள் பொருள் தருகின்றது.

நிர்மால்யம் என்ற இச்சொல் ஒரு கல்வெட்டில்: "உடையார் கோயில் குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு ௰அ பலநாளும் **நிர்மாலிய சாங்கரிய மாய்** இராநின்ற தெந்று அறிவித்தமையில் . . . ." [S.I.I. Vol. VII Ins. 1041] என்று குறிப்பிடப் பட்டுள்ளதைக் காணலாம்.

ஆனால் இங்குள்ள சிவன் கோயில் வடதிருச்சுற்றில் அமைக்கப்பட்டுள்ள ஒரு சதுரமான தொட்டி அபிஷேக நீர்வரும் கோமுகத்திலிருந்து சுமார் 3 அடி தூரத்தில் காணப்படுகின்றது. இத்தொட்டி 3 அடிக்கு 3 அடி சதுரமாக அமைந்துள்ளது. இதன் மேல்பட்டையான பகுதியில் இரண்டுவரிக் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. அதில் இந்தத் தொட்டியை தர்மமாக அமைத்தவர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. 'நிர்மால்யம்' என்ற சொல் இதில் 'நின்மால்ய' என வருகின்றது.

அக்கல்வெட்டு வருமாறு;

1. ஸ்வஸ்ஸ்ரீ இந்த நின்மால்யத் தொட்டி குணபரன்

2. கைவேலழகியார் உள்ளிட்டார் தன்மம் வ'

அளவுகோல்

மேலும் இக்கோயிலின் தென்புறத்தில் கருவறையின் அதிட்டானப் பகுதியில் அளவுகோல் ஒன்று கல்வெட்டுடன் காணப்படுகின்றது. இவ்வளவுகோல் நிலம் அளக்கப் பயன் படுத்தப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்வது போல் இக் கல்வெட்டு;

1 நிலவளவுக்கு [மு]ளக்கோல் 1

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் நீளம் தற்போதைய அளவுப் படி 14 அடி 7 அங்குலமாகும்.

மேற்சொன்ன இவ்விரு செய்திகளும் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டின் எழுத்தமைதியைக் கொண்ட கல்வெட்டுச் செய்தி களாகும்.

3 குதிரை குத்திப்பட்டான் நடுகல் கல்வெட்டு

நாக. கணேசன்,
காப்பாட்சியர், கரூர்

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தோகைமலை என்ற ஊரில் மலையின் வடகிழக்குத் திசையில் மலையிலிருந்து சுமார் 100 மிட்டர் தூரத்தில் பாம்படான் குளத்தின் வடகரையில் பெரியசாமி என்பவரின் தோட்டத்தில் இந்நடுகல் உள்ளது. 140 செ.மீ. உயரமும், 59 செ.மீ. அகலமும் கொண்ட பலகைக் கல்லின் ஒருபக்கத்தில் கல்வெட்டும், வரைகோட்டு உருவமும் பொறிக்கப் பட்டுள்ளன. கல்லின் மேல்பக்கத்தில் மூன்று வரிகளில் வட்டெழுத்துக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் கீழ் குதிரை மீது அமர்ந்துள்ள வீரனோடு தரையில் நிற்கும் வீரன் போரிடும் காட்சி வரைகோட்டு உருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. குதிரை மீதுள்ள வீரன் தன் கையிலுள்ள ஈட்டியைக் கொண்டு தரையிலுள்ள வீரனை குத்த முற்படுவது போலவும், தரையில் நிற்கும் வீரன் தனது இடக்கையினால் குதிரையின் கழுத்தைப் பிடித்துத் தள்ளியபடி வலக்கையிலுள்ள ஈட்டியைக் கொண்டு குதிரை மீது அமர்ந்துள்ள வீரனைக் குத்துவது போலவும் பொறிக்கப்பட்டுள்ளது. வரை கோட்டு உருவமாகப் பொறிக்கப்பட்டுள்ள இக்காட்சி கி.பி. 6, 7-ம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்துகளில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது. தொடூரில் நடைபெற்ற போரின்போது குதிரைமீது வந்து ஆநிரையைக் கவர்ந்த குதிரை வீரனைக் **சேந்தன் நந்தனரர்** என்பவன் தடுத்து அக்குதிரை வீரனைக் குத்தி கொன்று தானும் இறந்து பட்டான். இறந்துபட்ட அவ்வீரன் நினைவாக எடுக்கப்பட்ட நினைவுக் கல்லே இக் குதிரைகுத்திப்பட்டான் நடுகல்லாகும். கரூர் மாவட்டத்தில் பௌத்திரம் என்ற ஊரில் கட்டுரையாளரால் அண்மையில் இதுபோன்று குதிரைக்குத்திப்பட்டான் நடுகல் புடைச் சிற்பம் கண்டுடறியப்பட்டது. அந்நடுகல்லில் கல்வெட்டுப்பொறிப்புகள் காணப்படவில்லை. வட்டெழுத்தில் அமைந்த கல்வெட்டுடன் கூடிய குதிரை குத்திப்பட்டான் நடுகல் கரூர் மாவட்டத்தில் கிடைப்பது இதுவே முதல் முறையாகும். சோழ நாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் எல்லையாக விளங்கும் குளித்தலைக்கருகில் வட்டெழுத்து நடுகல் கல்வெட்டு கிடைத் துள்ளமை கி.பி. 6, 7-ம் நூற்றாண்டில் வட்டெழுத்துகள்

வழக்கிலிருந்த எல்லையினை அறிய உதவுவதோடு, அக்காலத்தில் நடைபெற்ற போரின் தன்மையை விளக்கும் சிறந்த ஆவணமாகவும் விளங்குகின்றது.

கல்வெட்டு

1. தொடுரு ஆண்கோலன்று
2. ஊரத்துள் குதிரை குத்
3. தி பட்டாரு சேந்தனந்தனார்

குறிப்பு ; கல்வெட்டினை படித்திட உதவிய திரு. சு. இராசகோபால், திரு இரா. பூங்குன்றன், திரு. சீ. இராமசந்திரன் ஆகியோருக்கு நன்றி.

செப்புத்திருமேனிகள் பாதுகாப்பு குறித்த கல்வெட்டு கண்டுபிடிப்பு

தரங்கம்பாடி வட்டத்தின் நடுவில் ஓர் உட்கிராமமாக பாதுகாப்பான சூழலில் இரு ஆறுகளுக்கு இடையில் திருவிடைக்கழி எனும் ஊர் இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது. இங்குள்ள சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் சோழர் கலைப்பாணியில் கட்டப் பட்டுள்ளது. முற்காலத்தில் போர் நடக்கும் போது, பஞ்சகாலங் களிலும் மக்களுக்கு மட்டுமின்றி திருக்கோயிலில் உள்ள பஞ்சலோக சாமி சிலையின் பாதுகாப்பு இடமாகவும் திவிடைக்கழி இருந்து வந்துள்ளதைக் கல்வெட்டால் அறிய முடிகிறது.

திருவிடைக்கழி - பெரியகாட்டான் - தெருவகையில் தினமும் ஒருவர் திருக்கோயிலுக்குச் சென்று செப்புத் திருமேனிகளை பாது காந்து வைத்திருக்கும் பகுதியைக் காவல் பணிக்காகச் சென்று காத்து வரவேண்டும். இதற்குரிய செலவினை பெரிய நாட்டு வேளார் குழு தானம் செய்துள்ளதும் இந்தர்மம் சந்திர சூரியர் உள்ள வனர நடப்பதாகவும் கூறி அளிக்கப்பட்டுள்ளதை ஒருகல்வெட்டு தெரிவிக்கிறது. செம்பனார் கோயிலில் உள்ள மூன்றாம் குலோத் துங்கனின் கல்வெட்டில் இக்கோயில் செப்புத்திருமேனிகள் வைத்துப் பாதுகாத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கோ. முத்துசாமி
காப்பாட்சியர், தரங்கப்பாடி

4 நாகூர் திருவாசல் கல்வெட்டு

இர. ஜெயராமன்

இளநிலைக் கல்வெட்டாய்வாளர், தஞ்சாவூர்

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் பேருந்து செல்லும் நெடுஞ்சாலையின் மேற்புறம் ஒரு பழைய வீட்டின் திண்ணைச் சுவரில் ஒரு கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது. இந்த வீடு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் ஒரு தர்மசாலையாக இருந்துள்ளது. நாகூரில் பிரசித்தி பெற்று விளங்கும் நாகூர்தர்காவில் அல்லாவை வணங்க வரும் பக்தர்கள் இக்கட்டடத்தில் தங்கிச் சென்றதாகத் தெரிகிறது. மேலும் இந்த வீட்டைத் திருவாசல் என்றே கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டின் தொடக்கத்தில் கீசுரத்து ௲௨௱௨௰௭ வருடம் ஆங்கிலா ௵ காற்த்திகை ௴ ௨௰௬ ௨ என்று குறிப்பிடப்பட்டுள்ளது கீசுரத்து என்பது முகமதியக்களின் ஆண்டான ஹிஜிரி வருடத்தைக் குறிக்கும். ஆங்கிலா வருடம் தமிழ் ஆண்டான ஆங்கிரஸ வருடத்தைக் குறிக்கும். இதற்குச் சரியான கி.பி. ஆண்டு 1812 டிசம்பர் 9 - ம் தேதி. இந்தக் காலத்தில் நாகூரிலிருக்கும் நூறுமுகம்மது மரைக்காயர் குமாரர் முகம்மது மரைக்காயர் அவர்கள் இத்திருவாசலைக் (சத்திரம்) கட்டியதாகவும், யாத்ரிகர்கள் வந்து தங்குவதற்கு ஏதுவாக பின்புறமுள்ள தோட்டம், குளம் ஆகியவற்றைத் திருப்பணி செய்ததாகவும், இத் தர்மத்தைக் காப்பவர்கள் அல்லாவினுடைய நன்மையைப் பெறுவார்கள் என்றும், கெடுதி நினைப்பவர்கள் அல்லாவினுடைய முனிவில் அகப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு வாசகம்

கீசுறத்து ௲௨௱௨௰௭ ௵ மெல்

ஆங்கிலா ௵ கரற்த்திகை ௴ ௨௰௬ ௨

ணாகூரிலிருக்கும்

நூறுமுகம்மது மரைக்காயர்

குமரர் முகம்மதுஅலி மரைக்காயர்

அல்லாவுக்காக வெகுச

ணங்களுக்கு உதவும்
படியாகச் செய்து வைத்த
குளம் திருவாசல் தோட்டம்
வீடு கடைத் திருப்பணி அடங்
கலும் தறுமம் பண்ணினதுக்கு
யெல்கை ராசவீதிக்கி மேற்சத்ய கீ
ள்புரம் தெற்கு வடக்கு சாதி
அடி ௱௬௰௪ மேல் தலை சா
தி அடி ௨௱௬ கிளக்கு மேற்க்
கு சாதி அடி ௨௱௬௰௫ யிதெ
சாற்ந்த [த]ாராசம் தெற்க்
கு வடக்கு சாதி அடி ௰௫ கி
ளக்கு மேற்க்கு சாதி அடி
௭௰௨ இதுகள் அடக்கலு
ம் தற்மத்துக்கு விட்டபடி
யினாலே யெந்தக் காலத்
திலேயும் யிதுக்கு உதவி
யாக யிருக்கிற பேர்கள்
யெல்லாம் அல்லாவு
டைய றெகுமத்துப் பெ
றுவார்கள் யாதொரு
முகாந்திரத்திலே விகர்த
[ம்] நினைக்குற பேர்கள் யெ
ல்லாம் அல்லாவுடை
[ய] முனிவில் அகப்படு
வார்கள்.

5

தரங்கம்பாடி ஓலை ஆவணங்களால் அறியப்படும் தொழில்கள்

இரா. சிவானந்தம்
நூலகர், தொல்லியல் துறை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் 2005ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட ''*தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள்*''* என்ற நூலில் உள்ள 110 ஓலை ஆவணங்கள் மூலமாக 18-19ஆம் நூற்றாண்டில் தரங்கம்பாடிப் பகுதியில் நடைபெற்ற தொழில்களைப் பற்றி அறிவதே இக்கட்டுரையின் நோக்கம். மேற்கூறப்பட்ட காலகட்டத்தில் தரங்கம்பாடிப் பகுதி டேனிஷ் மற்றும் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகத்தின் கீழ் இருந்தது. பெரும்பாலான ஓலை ஆவணங்களில் 'தரங்கம்பாடி'[1] என்றும் சில ஆவணங்களில் 'தயங்கம்பாடி'[2] என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தரங்கம்பாடி மாசிலாநாதர் கோயிலில் உள்ள 14ஆம் மற்றும் 16ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் இவ்வூர் 'சடங்கன்பாடி'[3] என்றழைக்கப்பட்டுள்ளது. தற்போது தரங்கம்பாடி என்றும் Tranquebar என்றும் அழைக்கப்படுகின்றது.

மீன் பிடித்தல்

குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல் மற்றும் பாலை என ஐவகை நிலங் களில், இப்பகுதி மருதம் மற்றும் நெய்தல் நிலப்பகுதியைச் சார்ந்தது. நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடத்தைக் குறிக்கும். இந்நிலப்பகுதியின் வசிப்ப வர்கள் பரதவர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர் என அழைக்கப்படுவர். மீன் பிடித்தல், தோணி கட்டுதல், வலை பின்னுதல் போன்றவை இவர்களின் தொழிலாகும். 'மீனெறி பரதவர்'[4], 'நுண்வலைப் பரதவர்[5] என்ற சங்க இலக்கியச் சொற்றொடர்களால் இதனை அறியலாம். இவர்கள் வசிக்கும் பகுதி பட்டினப் பாக்கம், பட்டினச்சேரி, பட்டினவர்சேரி என்றழைக்கப்படும்.

இவ்வோலை ஆவணங்களில் கடலில் மீன் பிடித்தல் பற்றிய குறிப்புகள் இடம் பெறவில்லை எனினும் குளம், ஏரிகளில் மீன் பிடித்தலைப்பற்றிய செய்தி களும் மீன் பிடித்துக்கொள்ளக் குத்தகை விடும் செய்திகளும் காணப்படுகின்றன. மீன்களைப் பிடித்துக்கொள்வதற்கான குத்தகை பாசிக்குத்தகை[6] எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. பாசிக்குத்தகை என்பது குளம், ஏரி, ஆகிய நீர்நிலைகளில் மீன் பிடித்துக்கொள்ள விடப்படும் குத்தகையாகும். மேலும் குளம், ஏரிகளில் படியும் பாசி மற்றும் வண்டல் நல்ல உரமாகும் என்பதால் அதைப் பயன்படுத்திக் கொள்வதுமாகும் மீன் பிடிப்பவர் செம்படவர்[7] என்றும், இவர்கள் வசித்த பகுதிச் செம்பிடப்பாளையம்[8] என்றும் அழைக்கப்பட்டுள்ளது. மீன்பிடிக்க விடும் பங்சிக் குத்தகையைப் பற்றிய செய்திகள் பல ஓலை ஆவணங்களில் கிடைப்பதால் மீன்பிடி தொழில் சிறந்த நிலையில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

தோணி கட்டுதல்

நீர்க்கலங்களில் நாவாய், வங்கம், பஃறி, அம்பி, திமில், தோணி என்பன சிலவகைகள். இவற்றில் தோணி என்பது மீன் பிடித்தலுக்கும் பெரிய கலங்களி லிருந்து பொருள்களை ஏற்றிக் கொண்டு உப்பங்கழிகள் வழியாகக் கரைக்கும் அதே வழியாகக் கலத்திற்கும் சேர்ப்பதற்குப் பயன்படுவதாகும். தரங்கம்பாடித் துறைமுகம் வழியாக நெல், தோல் போன்ற பொருள்கள் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. தரங்கம்பாடிக் கோட்டைக்குத் தெற்கில் உள்ள ஆற்றங்கரை அருகே அமைந்திருந்த பண்டகசாலைகளிலிருந்து மற்ற பகுதிகளுக்கு உப்பங்கழி வழியாகக் கடலில் உள்ள கப்பல்களுக்குத் தோணிகள் மூலம் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மேலும் இத்தோணிகள் தரங்கம்பாடிப் பகுதிகளிலே உருவாக்கப்பட்டுள்ளன. 'உரு பதினாலு காிசை ஏத்துமதியான தோணியும்[9] என்ற ஓலை ஆவணக் குறிப்பின் மூலம் இப்பகுதியில் தோணிகள் தயார் செய்யப்பட்டன என்பதை உணரலாம்.

துணி உற்பத்தி

''காங்குப் பிடவையும் மத்த பலவித பிடவையும் யெங்கள் கயி குத்த மில்லாமல் னாணயங் கொட்டி குடுத்து பிரவச் சேரி சாவடியில் குடுக்கிற''[0] என்ற ஓலை ஆவண வரிகளால் நூல் புடைவைகள் உற்பத்றி செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்யலாம். துணிகள் தயாரிக்கத் தேவைப்படும்] மூலப் பொருளான பருத்தி இப்பகுதியில் விளைந்துள்ளது.[11] 'ஆலை வெள்ளை நூல் கொண்டு 68 ராத்தல்''[12] என்ற ஆவணக் குறிப்பால் நூல் நூற்கும் ஆலைகள் இருந்துள்ளதை அறியமுடிகிறது. தில்லையாளிப் பகுதியில் சாயப்பட்டறைத் தொழில் சிறப்பான முறையில் நடந்துள்ளது.[13]

காங்குப் புடைவை என்பது கருநீல நிறப் புடைவை(துணி)யாகும்.[14] இப்பகுதியில் காங்குப் புடவைகள் மிகுதியாகவும் மற்ற பலவிதப் புடைவைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.[15] இப்புடைவைகளில் மர அச்சுகள் மூலமாக பட உருவங்களைப் பதிக்கும் பணிக்குக் 'கொட்டுதல்' என்று பெயர்.[16] இப்பணியைச் செய்பவர்கள் 'கொட்டுக்காரர்கள்' என்றழைக்கப்பட்டுள்ளனர். கொட்டுக்காரர்கள் என்றழைக்கப்பட்டுள்ளனர். கொட்டுக்காரர்கள் வசித்த பகுதியைக் கொட்டுப் பாளையம் என்றழைத்துள்ளது குறிப்படத்தக்கது.[17]

உற்பத்தி செய்யப்பட்ட துணி வகைகள் அதற்குரிய சாவடிகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப்புடவைகளில் எந்தவிதக் குறைகளும் இல்லாமல் நாணயமாக ஒப்படைப்பேன் என்ற உறுதி மொழி அளித்துள்ளதையும் ஓலை ஆவணக்குறிப்புகள் தெரிவிக்கின்றன.[18]

தரங்கம்பாடிப் பகுதியில் துணிகள் மிகுதியாகத் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. துணி விற்பனைத் தொழிலைச் சவுளி வியாபாரம் என்றழைப்பது வழக்கம். இதனை உறுதி செய்யுய் விதமாகச் சவுளிக்கடை ஆறுமுகம் செட்டியார்,[19] சவுளி சொக்கலிங்கம்[20] என்று தொழிலுடன் கூடிய பெயர்களை ஓலை ஆவணங்களில் காணலாம்.

கட்டுமானத் தொழில்

தரங்கம்பாடிப் பகுதியில் தற்போது காணப்படுகின்ற டேனிஷ் காலக் கட்டடங்கள் அழகாகவும், நேர்த்தியாகவும் கட்டப்பட்டுள்ளன. மேலும் தெருக்கள் அகலமாகவும், நேர்ததியாகவும் கட்டப்பட்டுள்ளன. மேலும் தெருக்கள் அகல மாகவும் நேராகவும் அமைந்துள்ளன. "பண்டகசாலை கட்டிக் கொடுக்க குத்தகை சீட்டு யென்னமென்றால் தங்கள் பண்டாலைக்கு மேற்கு ராமா நாயக்கர் பண்டக சாலைக்கு தெற்கு றாச வீதிக்கு வடக்கு இன்னாங்கெல்லைக்குட்பட்ட கட்டுக் கோப்பான அழகிய பண்டகசாலை ரெண்டு அதனைச் சேர்ந்த ரவுண்டு முகப்பும் நிலை கதவும் சகல சோடிப்பும்[21] என்ற ஆவணச் சொற்றொடரிலிருந்து பல்வேறு நபர்களுக்குச் சொந்தமான பல்வேறு பொருள்களை விற்பனை செய்யவும், சேர்த்து வைப்பதற்கும் பண்டகசாலைகள் இருந்துள்ளமை தெரிகிறது. மேலும் பண்டக சாலைகள் திடமானதாகவும், அழகாகவும், கலை நயத்துடனும் சிறப்பாக கட்டப்பட்டுள்ளதை அறிகிறோம். மேலும் 'கட்டுக் கோப்பு ஓட்டு வீடு,[22] 'கட்டுக் கோப்பு கல் வீடு'[23] என்பதன் மூலமாகவும் கட்டப்பட்ட வீடுகளின் வகைகள் மண், செங்கல், கல் ஆகியவற்றால் அமைந்திருந்தன என்றும் அறிகிறோம். இவ்வாறு கட்டுவதற்குத் தேவையான கட்டுமானப் பொருள்களான செங்கல், ஓடு, சுண்ணாம்பு, ஆகியவை இப்பகுதியிலே சிறப்பாகத் தயாரிக்கப்பட்டுள்ளதை ஓலை ஆவணங்களால் உறுதி செய்யமுடிகிறது.

செங்கல், ஓடு தயாரிப்பு

'செங்கல்லிலும் ஓட்டிலும் கோடிக் கறுப்பு வேகா யீரவரி யிரசல் இல்லாமல் கொண்டு வந்து வைத்து[24] என்ற ஓலை ஆவண வரிகளால் செங்கல் மற்றும் ஓடு தயாரிப்பு நடைபெற்று வந்ததை அறியலாம். செங்கல், ஓடு ஆகியவற்றின் அதிக வெப்பத்தில் ஓரப்பகுதிகளில் கருப்பு வண்ணம் ஏற்படுதல், வேகாமல் இருத்தல், ஈரமாய் இருக்கும்போது ஏற்படும் வரிகள், இரசலாக (கனமின்றி) இருத்தல் போன்ற குறைகள் இல்லாமல் நல்ல தரமுள்ளதாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு குறைகள் இல்லாத தரமுள்ள செங்கற்கள் மற்றும் ஓடுகளை ஆத்தங்கரைப் பண்டக சாலையில் ஒப்படைக்க வேண்டும் என்று உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் தயார் செய்யப் பட்ட செங்கற்கள், ஓடுகள் பண்டக சாலைகளில் இருப்பு வைக்கப்பட்டு விற்பனையும், ஏற்றுமதியும் நடைபெற்றுள்ளதை அறிகிறோம்.

சுண்ணாம்பு

கட்டடம் கட்டுவதற்குத் தேவையான மூலப்பொருள்களில் ஒன்றான சுண்ணாம்பு தயாரிக்கப்பட்டுள்ளது. கடற்கரைப் பகுதி என்பதால், இப்பகுதியில் மிகுதியாகக் கிடைக்கக்கூடிய கிளிஞ்சல்கள் மூலம் சுண்ணாம்பு தயாரிக்கும் தொழில் சிறப்பாக நடைபெற்றது. "சுண்ணாம்பு பாளையத்திலிருக்கும் சு. செம்பறாய பிள்ளை"[25] மற்றும் "சுண்ணாம்புக்காற தாண்டவராய பிள்ளை"[26] என்ற

குறிப்புகள் வழியாக சுண்ணாம்பு உற்பத்தி செய்பவரைத் தொழிலுடன் கூடிய அடைமொழியுடன் அழைத்துள்ளதையும், இத்தொழில் செய்யும் பகுதியைச் சுண்ணாம்பு பாளையம்[27] என்று வழங்கியதையும் அறியலாம்.

ஆடு, மாடு மேய்த்தல்

உழவர்களுக்கு விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கும் ஆடு, மாடுகள் அதிகமாக வளர்க்கப்பட்டுள்ளன. ஆடு, மாடுகள் மேய்ப்பதற்கான உடன்படிக்கைகளும் இவ்வோலை ஆவணங்களில் உள்ளன. இவ்வோலை ஆவண உடன் படிக்கைகளில் உழவுமாடு வகையறா, பசுமாடு வகையறா எனத் தனித்தனியாகக் குறிப்பிட்டுள்ளனர்.[28] மேலும் சிகப்பு பசு கிடாரி, மயிலைக் கிடாரி, வெருமைக் கிடாரி, கிடாக்கன், காளைக்கண், வெள்ளைக்கிடாரி என இனங்களையும் குறிப்பிடப்பட்டுள்ளன.[29]

ஆடு, மாடுகளை இடையர் என்ற பிரிவினர் மேய்ப்பது வழக்கம். இடையர்கள் வசிக்கும் பகுதி 'வேணி' என்றழைக்கப்படும்.[30] இதற்குச் சான்றாக ''வேணிப்பாளையசேரியிலிருக்கும் முத்து யெழுதிக் கொடுத்த மாட்டுத் தோல் ஒப்பந்த சீட்டாவது''[31] என்ற ஆவண வரிகளால் வேணிப்பாளையம் இடையர்கள் வசிக்கும் பகுதி என்பது ஒப்புநோக்கத்தக்கது.

தோல் பதனிடும் தொழில்

ஆடு மாடுகளின் தோல்களை பதப்படுத்தி விற்பனை செய்யப்பட்டதை ஆட்டுத்தோல் மாட்டுத்தோல் ஒப்பந்தங்களால் அறியலாம். பள்ளைத்தோல், செம்பிலித் தோல் என்று பள்ளை ஆடு, செம்மறி ஆட்டின் வகைகளைக் குறிப்பிட்டுள்ளனர்.[32] எனவே ஆடுகளின் வகைகளுக்கேற்பத் தோலின் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கலாம் என்பது நோக்கத்தக்கது. ''அடிமூணில் முப்பத்தஞ்சும் அடி ரெண்டே முக்காலில் முப்பதஞ்சும்''[33] என்ற குறிப்பின் மூலம் தோல்களின் வெவ்வேறு நீள, அகல அளவுகளைக் கொண்டும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளமை தெரிகிறது. ''வெயிலாப் பாடம், பீத்தல் பிடுங்க[34] என்பதிலிருந்து தோல்கள் சரியான முறையில் பாடம் செய்யப்பட்டும் (பதப்படுத்துதல்), ஓட்டை, கிழிசல் இல்லாமலும் ஒப்படைக்கப்பட்டதையும் அறிகிறோம், இறந்த ஆடு மற்றும் மாட்டின் ரோமங்கள் சுண்ணாம்பை (CaoH) பயன்படுத்தி அகற்றப்படும்.

உப்பு உற்பத்தி

உப்பளங்கள் மூலம் உப்பு உற்பத்தி மிகுதியாக நடைபெற்றுள்ளது. உப்பளங்களை மற்றவரிடம் விற்கும் பழக்கத்தையும், உப்பளங்களுக்கு எண் இடும் வழக்கத்தையும் ''சுத்தக் கிறைய சாசணச் சீட்டு கொடுத்தபடி .... 25-ஆம் நம்பர் உப்பளம்[35] என்ற ஆவணக் குறிப்பால் உறுதி செய்யலாம். பயன்படாத உப்பளங்களை உப்பளத்தரிசு நிலம்[36] என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

திராட்சை

சாத்தங்குடியில் 'சாலமன் தோட்டம்' என்பது திராட்சை பயிரிடப்பட்ட தோட்டமாகக் கருதப்படுகிறது. தரங்கம்பாடிப் பகுதியில் திராட்சை விளைவிக்கப் பட்டதைத் ''தில்லையாளியில் தங்களுதாகிய நீலத் தொட்டி தோட்டத்திலிருக்கும் யிசப்பு மாமரம் தென்னமரம் கொடி முந்திரி பந்தல் மேல வாசல் சாலைக்கு தெக்காக யிருக்கும் நிலமும்''[37] என்ற குறிப்பால் அறியலாம். இதில் 'கொடி முந்திரி' என்பது திராட்சையைக் குறிக்கின்றது. திராட்சையை மலையாள மொழி யில் முந்திரி என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. திராட்சைப் பந்தல்கள் கட்டி அதனில் விளைக்கப்படுவதுமாகும். மேலும் கடந்த காலங்களில் தரங்கம்பரடி திராட்சைக்கு சிறப்பான இடம் பெற்றிருந்ததும் நினைவுகூரத்தக்கது.

சோப்புத் தயாரிப்பு

சவுக்காரம் என்பது தற்போது சோப் என்ற ஆங்கிலச் சொல்லால் அழைக்கப்படுகிறது. சவர் என்பது உப்பு நிலத்தைக் குறிக்கும், சவர்க்கம் என்பது கல்லுப்பாகும். சவுக்காரக்கல் என்பது ஒரு வகை மாக்கல்லைக் குறிக்கும். இது சோப்பு தயாரிக்கப் பயன்படும் கூட்டுப்பொருளாகும்[38] அமிலம், காரம் என்பவை வேதியல் பெயர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தரங்கம்பாடி கடலோரப்பகுதி உவர்நிலம் என்பதால், சோப்பு தயாரிக்கத் தேவையான மூலப்பொருள் இயற்கை யாகக் கிடைத்துள்ளது. எருக்கிடாஞ்சேரியில் சவுக்காரக் கிடங்கு ஒன்று இருந்துள்ளது. 'எருக்கிட்டாஞ்சேரி சவுக்காரகிடங்கில் சரக்கு காய்ச்சுகிற அண்டாவும் அடிக்கிண்ண வேலை செய்து கொடுக்க''[39] என்ற குறிப்பால் சோப்புத் தயாரிக்கும் முறையினையும் அறிகின்றோம்.

அரிசி ஏற்றுமதி

இப்பகுதியில் ஏரி, குளம், ஆற்றுப்பாசனங்கள் மூலம் விவசாயம் சிறப்பாக நடைபெற்றிருந்தது. பருத்தி, திராட்சை, வெற்றிலை, அவணம் (பாக்கு), போன்ற பணப்பயிர்கள் தவிர நெல்லும் சிறப்பாக விளைவிக்கப்பட்டது. பிரகல சம்பா[40] என்ற ஒரு வகை சம்பா நெல் பயிரிடப்பட்டுள்ளது. நெல் மற்றும் அரிசி ஆகியவை விற்பனை செய்யப் பண்டக சாலைகளில் இருப்பு வைக்கப்பட்டன. நெல் மரக்கால் என்ற அளவால் அளக்கப்பட்டுள்ளது. 'தரகன் மரக்காலால் அளந்து விடுவேனாகவும்' என்பதலிருந்து பல்வேறு மரக்கால்கள் இருந்ததையும் இவற்றுள் ஒன்று தரகன் மரக்கால்[41] என்றும் அறியலாம், மேலும் ''கலப்பத்து உரு பதினாலு கரிசை ஏத்துமதியாகிற தோணி'' என்ற ஆவணக் குறிப்பினால் தோணியின் கொள்ளளவு பதினாலு கரிசை என்பதை அறியமுடிகிறது.[42] நெல் அளவைக் கரிசை என்ற அளவாலும் குறிப்பது வழக்கம். இக்குறிப்பால் நெல், அரிசி மற்றும் இதர பொருள்களும் ஏற்றுமதியானதை நன்கறியலாம்.

பொது விலை நிர்ணயம்

பணத்திற்கு ஈடாக ஒரு பொருளை வைத்து உரிய நேரத்தில் திருப்பாமல் போனால் ஈடாக வைத்த பொருளை ''நாலு பேர் யிட்ட விலைக்கு வித்து

ரொக்கத்தில் செலுத்தி வைப்பேனாகவும்[43] என்றும் பொது இடத்தில் பெறுகின்ற தொகையை ''அங்காடிப் பார்வையாக நாலு பேர் முன்பாக னான் ரொக்கம் பத்திக் கொண்ட''[44] என்றும் ஆவணக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அப்பொருளின் விலையைப் பொதுவானோர் நிர்ணயிருப்பது சிறப்பான செய்தியாகும்.

தரங்கம்பாடிப் பகுதியில் இருந்த இயற்கை வளங்களின் மூலம் கிடைக்க பெற்ற மூலப்பொருள்களைக் கொண்டே சிறப்பான தொழில் வளர்ச்சி பெற்றிருந்ததோடு மேலும் சிறந்த ஏற்றுமதித் துறைமுகமாகவும் செயல்பட்டதைத் தரங்கம்பாடி ஓலை ஆவணங்களால் அறியமுடிகிறது.

* தரங்கம்பாடி ஓலை ஆவணங்கள்-ஆசிரியர் : சீ. இராமச்சந்திரன் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை வெளியீடு, 2005.

1. ஓலை ஆவண ஏடு. 6
2. மேலது. 5
3. S.I.I. Vol. IV No. 399 & 401
4. நற்றிணை 19
5. குறுந்தொகை 184
6. ஓலை ஆவண ஏடு. 4 & 22
7. மேலது. 22
8. மேலது. 4
9. மேலது. 47
10. மேலது. 45
11. மேலது. 8
12. மேலது. 11
13. மேலது. 45
14. Tamil Lexicon
15. ஓலை ஆவண ஏடு. 45
16. ஓலை ஆவண ஏடு. 45
17. மேலது. 76
18. மேலது. 45
19. மேலது. 12
20. மேலது. 70
21. மேலது. 99
22. மேலது. 96
23. மேலது. 102
24. மேலது. 20
25. மேலது. 78
26. மேலது. 30
27. மேலது. 78
28. மேலது. 81
29. மேலது. 100
30. கதிற்வேற்பிள்ளை தமிழ் மொழியகராதி
31. ஓலை ஆவண ஏடு. 6
32. மேலது. 23
33. மேலது. 23
34. மேலது. 23
35. மேலது. 31
36. மேலது. 63
37. மேலது. 46
38. Tamil Lexicon
39. ஓலை ஆவண ஏடு. 90
40. மேலது.3
41. மேலது. 82
42. மேலது. 47
43. மேலது. 9
44. மேலது. 55

6

Early Days' Sailing Vessels and Navigation[1]

K. R. A. Narasiah[2]

Navigablity in olden days meant movement with simple floats to carry loads to different places, acorss the river and lakes. This was accomplished by propelling with oars. Later the wind force was used and sails of rudimentary desings were employed. The currents of the river were also useful for movement. This was found to be cheaper way to move loads than employing horses or oxen. Howexer the movement was restricted to the river currents behaved and the locations available.

Crossing the open sea was not even thought of, as the necessity never arose. However hugging the coast, wooden boats could travel to far distances Sri Lanka was thus an extension of the Indian Coast. Sea currents were also understood. The spirit of adventure in the man sent him on quest across the oceans even on perilous journeys.

According to the treatise credited to Boja Rāja of the 11th century we see that sufficient knowledge was available in india for building ships for different usages. From Tamil literature and legends we learn that the coastal people had variety of ships and they were known by their usage. The ships were known as, Kalam, Naavai, Vangam and Kappal.

Kalam was a timber vessel used locally between ports of the coast. Naavai was an ocean going vessel, to sail across to the distant places, while Vangam was fitted with mast and flew a flag Kappal was a later term probābly from Telugu. The ships had different figureheads like parimukam arimukam gajamukam etc.,

---

1. Text of the talk delivered in Archaeological department on 9th August 2005.
2. Former Chief Mechanical Engineer of Visakhapa:nam Port and World Bank Consultant for the Emergency rehabilitation programme of Kingdom of Cambodia

Planks of the boats were usually sewn wihh coconut fibre ropes, which not only held the planks together but also with some locally made paste, provided the required water tightness. Mast was called *koombu* and yardarm *parumal* (corruption of fireman of Persian) Rigs were *Alattu* and sails *Pai* Rows of side planks were *Vanku-vari* (counted from keel upwards) Prow was *Aniya pirai* and stern was *aniyathu-kattai*. Stone Ānchor was kal-nanguram (Langar in persian) Mariner's Compass was called machcha yantiram, which was actually a thin magnetised iron plate shaped like a fish, kept floating in bowl of oil. The tail end was the North.

TYPFS OF TIMBER AND THEIR MEASUREMENT

Timber was measured in Muzham and Viral (one muzham is 25 virals) The timber were from Iluppai, Punnai, siru tekku, aini, karimarudu etc., Punnai grew straight and in good lengh and had the property of flexibility· Most of these vessels were built in open beaches.

PLACES OF SHIP BUILDING

Adiramapattinam, Muthuppettai, Kodiakkarai were the ideal places to build ships. There were adjoining islands and villages with in a mangrove belt. Marshy lands were available and variety of timber too. There were traditional boat builders. An East West coastal stretch from Kodiakkarai to Tondi was the main place of construction. Largest boats were built in Kodiakkarai. Kalla Dhoni (Thief Boat or stealth boat) was a fast boat. This ship had a transom vertical to the base like later vessels. There was a short, heavy balance board outrigger laid athwart the gunwales.

NAVIGATION

While boat-building technology was shore based, the navigational techniques required deeper knowledge of sea behaviour, water currents and wind movements. We now know that Hippalus discovered the monsoon winds; but the early Indian sailors did have sufficient knowledge of the seasonal winds and currents.

Coastal navigation was based on shore markers and general topography of the land; in addition as per Sangam Literature, we understand that big light houses were built which burnt oil lamps and showed the way to the sailors. The target ports were

suffixed with "Kuri" or target. These target ports were the places to alter course Thus we have in the east coast, ports like Ambalakuri, (kuri meaniug target) where the ships normally changed course from south to south east, and reached SriLankan coast. They hugged the coast and reached Akkaraippatti in East Coast of SriLanka and set sail towards Eat across the sea. This must have been the way chosen by the Chola fleet to reach Sri Vijaya. Since they sailed below 10deg Parallel, it was not possible for them to site Pole Star, which disappeared into the haze of the horizon.

Sun's or stars AZIMUTH was calculated by practical knowledge and Viral Kanakku was used to determine the location. They also used tamed birds to identify the shore areas.

The navigational stars assisted the sailors. The rise of ARDRA in early January indicated the commencement of sailing season to the East with Arudra darsanam. (Was this the reason for the popular Tamil saying "Thai Pirandhal Vazhi Pirakkum"? Ardra, Margaseeram, araankottai (Kiruttika) Arundati and Tiruvonam were the sailors' stars.

Ardra and Margaseerom were noted as path finders (Orion group; they rise in the East at dusk in July - August, and at dawn in December - January.) In case these two guiding stars are not seen, the bright ROHINI (Alpha Tauri) and Kartik (Pleidas) on the Port bow side and MAKAM on the Starboard provided the guides. The alternative is SRAVAN as it rises when ARDRA sets, these being near the equator.

STEERING THE VESSEL

Steering was always by the steering oar. Sometimes dagger boards were used. Sukkan or rudder was not introduced till late in the period. The reason could be the speed of the vessel or easier methods by oars for smallar vessels. Outrigger was a flat or a secondary hull projeciing from the boat. Heavy outriggers in the Dhonis were ftxed permanently and the ships made thin and long and turned according to the wind. Fore sails were square or rectangular and had trouble in turning. So steering was difficult. Lateen sails were not used till late fourteenth century (lateen sails were triangular in shape and at 45^0 the mast to control the direction). This was not known to Indian sailors of early days.

STAR MEASURE

Dr. Arunachalam (Formerly of Mumbai University) has done extensive research in this area. According to him, the distances were measured by the Stars. From the Literary records, as per Dr. Arunachalam, uthara or Vada Meen was Arundati (Al Cor) Kau Nila is the status of the Pole Star and Kau Kanakku (Star Measure) is used by old seafarers. This measurement is also called Viral Kanakku. It is a refcrenee to the altitude of the specific star during the transit of the meridian.

Viral Kanakku in Tamil is the *ANGULI* in Sanskrit (¾of an Inch) Gujarathis used *Dhru* for the same measure Arabs called it *Isaba* and Chinese *Chih.*

SEASONAL DIRECTION

From South Kaveri delta, January and February were the months for outward sailling. They sailed southwards using VADAKKAN later they may have used MEMARI for Eastward trip The ports were noted as being in YAMAM distances. Direction of sailing and target ports (KURI)

STAR NAVIGATION - ASTRONOMY

Groups of stars were called voyaging stars Ship watch was 7.5 nallagi (3 hours) i.e., one YAMAM (eight yamams were one day) Distances at sea were measured at this quantity. There were 56 select star / star groups used by Tamil seamen. The groups and stars have their own local name. Field knowledge was passed on the family members orally. The rise of ARDRA in early January indicates the commencement of sailing season to the East with Arudra darsanam Ardra, Margaseeram, araankottai (Kiruttika) Arundati and Tiruvonam were the sailors' stars, Ardra and Margaseeram were noted as path finders (Orion group they rise in the East at dusk in July-August, and at dawn in December-January.

In case these two guiding stars are not seen, the bright ROHINI (Alpha Tauri) and Kartik (Pleidas) on the Port bow side and MAKAM on the Starboard provided the guides. The alternative star was SRAVAN as it rises when ARDRA sets, these being near the equator.

7 பவுனி-எழுத்துப் பொறித்த இசைக்கருவி

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர், தருமபுரி.

தருமபுரி மாவட்டம், பொம்மிடி அருகே 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது நடூர் கிராமம். இங்கு வசித்துவரும் மக்கள் அருந்ததியினர் வகுப்பைச் சார்ந்தவர்கள். இங்குள்ள திரு. கோவிந்தன் என்பவர் தன்னிடம் ஓர் பழமையான இசைக்கருவியை வைத்துள்ளார். இந்த இசைக்கருவியைப் பவுனிப் என்று குறிப்பிடு கின்றார். இந்த இசைக்கருவியைக் கோயில் திருவிழாக்கள் மற்றும் கிராம தெய்வ வழிபாட்டின் போது பயன்படுத்தி இனிய இசையை எழுப்பி இப்பகுதி மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளார்.

பவுனி என்று குறிப்பிடப்படும் இசைக்கருவி உடுக்கை போன்ற அமைப்பில் காணப்பட்டாலும் ஒரு புறம் சிறுத்தும் அடுத்த பகுதி பெருத்தும் காணப்படுகின்றது. இதில் சிறுத்த பகுதி திறந்த நிலையிலும், பெருத்த பகுதி உடும்புத் தோல் கொண்டு (பதப்படுத்தப்பட்டது) கட்டப்பட்டும் உள்ளது. இதன் பகுதி புளியங் கொட்டைப் பசை கொண்டு நன்கு தடவி அமைக்கப்பட்டுள்ளது.

திறத்த நிலையில் உள்ள இசைக்கருவியில் ஒரு பக்கத்திற்கு உள்ளே தோலை ஒட்டிய நிலையில் மரத்துண்டு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அந்த மரத் துண்டின் மையப்பகுதியில் இருந்து ஒரு நரம்பு கட்டப்பட்டு திறந்தவெளிப் பகுதியில் வெளியில் வரும்படி அமைக்கப்பட்டுள்ளது. இந்த நரம்பு கயிற்றைக் கையில் இறுக்கிப் பிடித்துக் கொண்டு தன் கையில் உள்ள மரத்தால் ஆன கட்டையைக் கொண்டு அந்த நரம்பில் தட்டி இனிய இசையை எழுப்புகின்றார். இதனுடன் சிறிய சலங்கை ஒன்றும் வைத்துள் ளார் நரம்பின் மீது தட்டிக்கொண்டே சிலம்பையும் ஒலிக்கச் செய்து இனிய இசையை எழுப்புகின்றார்.

இந்த இசைக்கருவியின் மேல் பகுதியில் விஷ்ணுக்குரிய சங்கு சக்கரமும், அடுத்த பகுதியில் சிவனுக்குரிய உடுக்கை திரிசூலமும் காட்டப்பட்டுள்ளன. இந்த இசைக் கருவி முழுவதும் பித்தளையால் செய்யப்பட்டது. இதன் நீளம் 20·05 செ மீ. ஒரு பக்கம் விட்டம் 17.05 செ.மீ. பின்பக்கம் 21 செ.மீ விட்டமும் உள்ளது. இந்த இசைக்கருவியின் மையப்பகுதியில் மூன்று தலை நாகத்தின் உருவம் பதிக்கப்பட்டுள்ளது.

இதன் சிறப்பு இந்த இசைக்கருவியை செய்து வழங்கியவர், காலம், இதன் சுற்றுப்புறப் பகுதி மக்கள் அவர்கள் வழங்க வேண்டிய வரித்தொகையையும், இதற்கு ஊறு விளைவித்தால் ஏற்படும் தீமை இவற்றையும் இந்த பவுனி இசைக்கருவியில் காணப்படும் நாகத்தின் இரண்டு பக்கமும் எழுதப்பட்டுள்ளது. எழுத்துகள் நிறைந்த இந்தப் பவுனி இசைக்கருவி மிகவும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது.

இதற்கு முன்னர் மரத்தால் ஆன பவுனியைக் கொண்டு வாசித்து வந்துள்ளனர். ஊர் மக்கள் கொடுத்த பொருளுதவி யினைக் கொண்டு இந்த இசைக்கருவி பித்தளையில் செய்யப்பட்டு அதற்கு உதவி புரிந்தவர்கள் பற்றிய விபரத்தையும் அக்கருவியிலே எழுதிப் பொறித்துள்ளனர்.

எழுத்துப்பொறிப்பு கூறும் செய்தி

இந்த இசைக்கருவியில் 23 வரிகளில் எழுத்துகள் வெட்டப் பட்டுள்ளன. கொளந்தை ஆசாரி மற்றும் வைரவமணி ஆசாரியாரும் படைவீட்டு அம்மன் உபயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கலியுக வருஷம் 4970 என்று குறிக்கப்பட்டுள்ளது (கி.பி. 1869). எனவே சுமார் 136 ஆண்டுகள் பழமை வாய்ந்த இசைக் கருவி என்றறிகிறோம்.

வைகாசி மாதம் 21ந் தேதி நாககும்பிடிக்காக தயைய கவுண்டன் மற்றும் தம்பா கவுண்டன் இவர்கள் இருவரும் முக்கின் நாயக்கன்பட்டியைச் சார்ந்த ஓர் இனத்தவரிடம் இந்த இசைக் கருவியை உபயமாகச் செய்து வழங்கியுள்ளனர். இந்த இசைக் கருவி வாசிக்க எவ்வளவு பணம் கொடுத்தல் வேண்டும் என்பதும், தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. திருமணத்திற்கு ரூபாய் 12ம், பாதம் 12ம், வெத்திலை படி அரிசி குடுக்கவும் தெங்கரைக் கோட்டை தாலூகா மருக்கம்பட்டி சக்கிலி பெந்தி காமதன்றன், மூக்கன், சிட்டுகான் அவர்களும் இப்பணியைச் செய்தல் வேண்டும், என்றும் குறிப்பிட்டு எழுதி வழங்கிய உபயம். மேலும் ஆண்டிகான் மாட்டுப்பட்டிக்கு பணம் 2 கொலுகாறன் ரூ 3 மற்றும் பெதறம் பட்டி, மூக்கனூர் போன்றவர்கள் ரூ 2ம் வரி கொடுத்தல் வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படாவிட்டால் கங்கையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தில் கடவது. தீர்த்தகிரியார் துணை என்று முடிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சுற்றி அமைந்துள்ள பிற கிராமத்து மக்கள் வழங்க வேண்டிய தொகையையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த

இசைக்கருவி பில்லி, சூனியம் பிடித்தவர்களையும் பேய் பிடித்தவர்களையும் விரட்டுவதாகக் கூறிப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தக் கருவியினைக் காலங்காலமாக ஒரு குறிப்பிட்ட இனத்தவரே அதிகமாக பயன்படுத்துகின்றனர். மேலும் இந்த இசைக்கருவி கிராம தெய்வங்களுக்காகவும், துஷ்ட தேவதைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு சுற்றி அமைந்த கிராம தெய்வ வழிபாட்டிலும் திருவிழாக்களிலும் இந்த பவுனி இசைக்கருவி இன்றியமையாத ஓர் இடத்தைப் பெற்றுள்ளது.

பொன் பன்
ணு வரவ
ஸ்ரு மதுபடனு
ன் உபயம் டி
காதி சகூஸ
ய்யாசி மீ உக தெதி
யகவுண்டன் தம்
ள் [ந]ண்டு பெரும் வுத
படி சக்கிலிகளும் நிட
புதுறு பவிநி காற
டுது-2-ரு பாயிரண்
க்க அய கலியான
ஸஉ பாத ஸஉ வெதி
டுக்கவும் ஊ தெங்கெங்
ற கூப்பட்டி சகிலி
ன மூக்கன் சிட்டுகான்
அனந்துலு ஆ
அம்மறுக பணி
பெறிய தனம் கொ
மாட்டு படி கு பனஉ
ா பட்டிசுஞ்சன சம்
ரப்படி தெல்லமுடு
யால் காசியில் காா
பொவ கடவது தீர்

கொளந்தை ஆசாரி
மலை ஆசாரி வியாசம்
வீட்டு அம்ம
உர சரமான கலியு
ஷு சரியான யிபவ ஷு ௧ வ
யில் நாககும்படி தயை
பா கவுண்டன் யிவர்[ற்]க
வியால் முககள நாகிய்ப
அபயம் பெதறம் பட்டி
ளுமனுத ஷு தலகட்
டு வள பண்டம் தடு
த்து குடிகள் வுத வந்யா
லை படி அரிசிக்கு
கொட்டே தாலுகா ம
பெந்தி காமதன் ளு வ
திவென அமீ சுசவறு
செயிது வச்ச வுபயம்
யிற் படி ஆண்டிகான
கொலுகாறன் ௧ செய
ாதன ரு பெதாசறம்பட்டி
கதிரிகா நீங்கள் யெல்லா
கான் உ நம் வரி குடுகாவி
பசுவை கொண் பாவதில்
தகிரியார் துணை

8 நெடும்பிறை பெருங்கற்கால ஈமத்தாழிகள்

து. துளசிராமன்
காப்பாட்சியர்,
தொல்லியல் துறை, பூண்டி

நெடும்பிறை கிராமம் செய்யாற்றிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரத்தில் செய்யாறுக்கு (திருவண்ணாமலை மாவட்டம்) வட கிழக்கே அமைந்துள்ளது. நெடும்பிறைக்கு கிழக்கே உள்ள கூட்டுச் சாலையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலைக்கு இரு புறமும் பெருங்கற்கால ஈமத்தாழிகள் மண்ணில் புதைந்துள்ளன. அவ்வூரைச் சேர்ந்த திரு.பக்தவத்சலம் என்பவருடைய நிலத்தைச் சீர்செய்யும் போது காணப்பட்ட ஒரு முதுமக்கள் தாழி ஆய்வு செய்யப்பட்டது. மேற்பகுதி சிறிது சிதைந்துவிட்ட இத்தாழி நீண்ட நாள்கள் மண்ணினுள் இருந்ததால் துண்டுகளாக உடைந்து விட்டது. இதிலிருந்து கருப்பு சிவப்பு வண்ணக் கலயங்களின் ஓடுகள் சேகரிக்கப்பட்டன.

இப்பகுதியில் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பிற்கு பெருங் கற்கால ஈமத்தாழிகள் நிலத்தில் புதைக்கப்பட்டுள்ளன. பெருங் கற்காலத்தில் (சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர்) இப்பகுதி பெரும் காட்டுப் பகுதியாக விளங்கியுள்ளது. இக்காலத்தில் நெடும் பிறைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் இறந்தவர்களைச் சுட்டுப் பின்னர் சுட்ட எலும்புகள் மற்றும் சாம்பலைச் சேகரித்து அவர்கள் பயன் படுத்திய மட்கலயங்களோடு தாழியினுள் வைத்து மூடி மண்ணில் புதைக்கும் வழக்கத்தினை மேற்கொண்டிருந்தனர் என்பதைத் தாழியின் உள்ளிருந்து சேகரிக்கப்பட்ட மட்கலயங்களில் மிக அதிக அளவில் கருமையான சாம்பல் கெட்டியாக இருந்தமையைக் கொண்டு அறியலாம். மேலும் சுட்ட எலும்புத் துண்டுகள் மிகவும் மக்கிய நிலையில் தாழியிலிருந்து சேகரிக்கப்பட்டன. இவ்வாறு மண்ணினுள் புதைக்கப்பட்ட தாழிக்கு மேலே ஒரு பெரிய கருங்கற் குவியலை வைத்தனர். இதனைச் சுற்றிலும் இயற்கையாக இப்பகுதியில் கிடைக்கும் கருங்கற்களை வட்டமாக நட்டனர். இதனைக் கல்வட்டம் (Cairm circle) என்றழைப்பர். இது போன்ற கல்வட்டங்கள் நெடும் பிறையில் அதிக அளவில் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் தாழி $2\frac{1}{4}$ அடி உயரமும், கூர்மையான அடிப்பகுதியும் கொண்டுள்ளது. கலயங்களை ஆய்வு செய்ததில்

குறியீடுகள் ஏதும் காணப்படவில்லை. தாழியினுள் வாள், குறுவாள் போன்ற இரும்புப் பொருட்கள் ஏதும் கிடைக்கவில்லை.

நெடும்பிறையில் பெருங்கற்கால ஈமத்தாழிகள் காணப்படுவது தற்போதுதான் முதன்முறையாகக் கண்டறியப்பட்டுள்ளது. தமிழகப் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் உள்ள ஊர்கள் வரிசையில் நெடும் பிறையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

தகவல் அளித்தவர்: க. ஈஸ்வரன், கல்வெட்டுப் படிப்பவர், தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, சென்னை-8.

முடிசூட்டு விழா நினைவு தண்ணீர்ப் பந்தல்

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டத்தில் உள்ள பட்டம் பாளையம் - நம்பியூர் செல்லும் சாலையின் வலது புறத்தில் சுமை தாங்கிக்கல் ஒன்று உள்ளது. இதில் கீழ்க்காணும் கல்வெட்டு காணப் படுகிறது.

கல்வெட்டு

1. 1911 ஷூ டில்லி	2. காரணேஷன்
3. நந்தவனம் த	4. ண்ணீப்பந்தல்
5. பட்டம்பாளையம்	6. வருஷம் 1 க்கு ஒ
7. ண்ணரை பொ	8. தி தவசம்
9. குடிகளால்	

கல்வெட்டின் பொருள்

1911 ஆம் ஆண்டில் விக்டோரியா மகாராணியின் முடிசூட்டு விழா நினைவாகக் குன்னத்தூரில் பட்டம்பாளையம் செல்லும் வழியில் தண்ணீர்ப் பந்தலும் அதனை ஒட்டி நந்தவனமும் அமைக்கப் பெற்றது. இத்தண்ணீர்ப்பந்தல் சிறப்பாக நடைபெறுவதற்காகப் பட்டம்பாளையம் பகுதி மக்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒண்ணரை பொதி தவசம் (தானியம்) வரியாகச் செலுத்த வேண்டும் என்பது கல்வெட்டின் பொருள். பல்லவர் காலம் தொடங்கிப் பொதுமக்களுக்காகச் சாலை ஓரத்தில் நந்தவனமும் தண்ணீர்ப்பந்தலும் அமைக்கப் பெற்றுள்ளன. இத்தகைய சமுதாயப் பணிகள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்தன என்பதற்கு இக்கல்வெட்டு சிறந்த சான்று ஆகும். ஜமீன்தார்கள் தங்களை ஆளுகின்ற ஆங்கிலேய அரசை கௌரவிக்கும் வகையிலும் இத்தகைய பணிகளை மேற்கொண்டனர் என்றும் பொருள் கொள்ளலாம்.

தெய்வத்திரு. இரா. ப. கருணானந்தன்
கோவை

9

கல்திட்டை கட்டடக் கலையின் தோற்றுவாய்

தி. சுப்பிரமணியன்
தொல்லியல் அலுவலர், தஞ்சாவூர்

தமிழகத்தில் கல்வட்டம், தாழி, கல்திட்டை ஆகிய மூன்று பெரும் பிரிவுகளாகப் பெருங்கற்காலச் சின்னங்கள் காணப் படுகின்றன. கற்குவை, கற்கிடை, குத்துக்கல், பேழை போன்றவை இவற்றின் உட்பிரிவுகளின் அமைப்பின் அடிப்படையில் பிரிக்கப் பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பகுதிகளில் காணப் படுகின்றன. இத்தகைய மாற்றங்கள் அப்பகுதியில் உள்ள இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.[1]

கல்வட்ட வகையைச் சார்ந்த பெருங்கற்படை தமிழகத்தின் வடபகுதியில் பரவலாகக் காணப்படுகின்றன. மற்ற பெருங்கற்படை களைவிடக் கல்வட்ட வகைகளைச் சார்ந்த சின்னம் அதிக அளவிலும் பலவகையான வளர்ச்சி நிலைகளை அடைந்தும் உள்ளன. ஆனால் கல்திட்டை தமிழகத்தின் வடக்கு மற்றும் மேற்கு எல்லைப் பகுதி களான தருமபுரி, வட, தென்ஆர்க்காடு மாவட்டங்களில் மட்டும் காணப்படுகின்றன. இது மற்ற பெருங்கற்படைகளிலிருந்து மாறுபட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் பல இடங்களிலும் தென், வடஆர்க்காடு மாவட்டங்களில் சில இடங்களிலும் கல்திட்டைகள் சிதைந்த நிலையிலுள்ளன.[2]

கல்திட்டைகள், அகன்ற பாறைகள், குன்றுகள் போன்ற உயரமான இடங்களில் அமைந்துள்ளன. இதுவரை தமிழகத்தில் கிடைத்துள்ள கல்திட்டைகளில் மல்லசமுத்திரத்தில் காணப்படும் கல்திட்டைகள் குறிப்பிடத்தக்கன. கிருட்டினகிரி மாவட்டத்தில் கிருட்டினகிரியிலிருந்து 20 கி.மீ. தொலைவிலுள்ள 'மொராலுபாறை' என்ற குன்றின் மேல் இக்கல்திட்டைகள் காணப்படுகின்றன. மொராலுபாறை என்பது இரண்டு பகுதிகளாக உள்ளன. இந்த இரண்டு பாறைகளிலும் சுமார் 200 கல்திட்டைகள் அமைக்கப் பட்டுள்ளன. இங்குள்ள கல்திட்டைகள் 1 மீட்டர் முதல் 2.30 மீட்டர் உயரம் வரை பல அளவுகளில் உள்ளன. இவற்றின் அமைப்பு

முறைகளைக் கொண்டு இங்குள்ளவற்றை நான்கு உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதல்வகை

இயற்கையாக அமைந்த விரிந்த கற்பாறையின் மேல் நான்கு பக்கங்களிலும் நான்கு பெரிய கற்பலகைகளை ஒன்றுடன் ஒன்று தாங்கி நிற்கின்ற அமைப்பில் கல்அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நான்கு கற்பலகைகளும் இதற்கு மேல் உள்ள மூடுகல்லும் இக்கல்லறையைச் சுற்றிலும் இரண்டு கற்பலகை வட்டங்கள் ஒன்றை அடுத்து ஒன்றும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

முதல் கல்வட்டத்தில் இரண்டு வகையான கற்பலகைகள் உள்ளன. ஒன்று செவ்வக வடிவிலும் மற்றொன்று அரைவட்ட வடிவிலும் காணப்படுகின்றன. இந்த இரண்டு வகையான கற்பலகைகளை ஒன்றை அடுத்து ஒன்று உள்ளதால் பார்வைக்கு தற்காலக் கோட்டை சுவர்ச் போன்று காட்சியளிக்கின்றது. இச்சுவரில் சதுர அமைப்புடைய நான்கு பலகைக் கற்களும் நான்கு அரைவட்ட அமைப்புடைய கற்பலகைகளும் உள்ளன.

இப்பலகைக் கற்கள் நிற்க ஏதுவாகத் தாங்குசுவர் ஒன்று செவ்வகம் மற்றும் சதுர அமைப்புடைய சிறிய கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இக்கற்கள் செங்கற்கள் போன்று பலகைக் கற்களுடன் இணைந்து காணப்படுகின்றன.[3]

இதைப் போன்று இரண்டாவது கல்வட்டமும், செவ்வகம், அரைவட்டம் ஆகிய பலகைக் கற்களுடன் தாங்கு சுவரும் இணைந்து காணப்படுகின்றது. ஆனால் இப்பலகைக் கற்கள் உட்பக்கத்திலுள்ளதைவிட உயரம் குறைவாக உள்ளன. இந்த அமைப்பு கல்லறையைச் சுற்றிலும் இரண்டு கற்பலகைச் சுற்றுகள் காணப்படுவது வரலாற்றுக் காலத்தில் கோயில்களில் இரண்டு திருச்சுற்றுகள் எடுக்கப்பட்டதற்கு அடிப்படையாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

இரண்டாவது வகை

இரண்டாவது வகைக் கல்திட்டையிலும், கற்பலகைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து சுவஸ்திகா அமைப்பில் கல்லறை காணப்படுகின்றது. இக்கற்பலகையில் இடுதுளை வட்ட வடிவில் உள்ளது. இந்த இடுதுளையின் முன்னே வாயில் பகுதி (Passage) அமைந்துள்ளது. இந்த வாயிலின் இரு பக்கங்களிலும் ஒன்றுக்கு

மேற்பட்ட பலகைக் கற்கள் உள்ளன. வாயிலின் முன்பகுதியும் பலகைக் கல்லைக் கொண்டு மூடப்பட்டுள்ளது.

கல்லறையைச் சுற்றிலும் கற்சுவர் வட்ட வடிவில் எடுக்கப் பட்டுள்ளது. இச்சுவர் மூடுகல் வரை உயர்த்திக் கட்டப்பட்டுள்ளது. இதனுடன் செவ்வகக் கற்பலகைகளால் ஆன கல்வட்டம் ஒன்று உள்ளது. இரண்டு வட்டங்கள் ஒன்றை அடுத்து ஒன்று காணப் படுகின்றன. வெளிவட்டம் உள்வட்டத்தைவிட உயரம் குறை வாக உள்ளது. சுவருக்கும், கல்லறைக்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிய கற்களைக் கொண்டு நிரப்பியுள்ளனர். கல்லறையைத் தாங்குகின்ற சுவர் போன்ற அமைப்பில் இது அமைந்துள்ளது. இக் கல்வட்டத்தின் மேற்குப் பகுதியில் 9 கல் வரிசைகள் சுவர் போன்று காணப்படுகின்றன.

மூன்றாவது வகை

மலையின் மேற்குப் பகுதியிலுள்ள கல்திட்டைகள் சில வேறு பாடுகளுடன் காணப்படுகின்றன. கல்லறையிலுள்ள கற்பலகைகள் மற்ற கல்லறைகளைப் போன்று உள்ளன. கல்லறையின் மேல் பகுதியில் ஒரு மூடுகல்லும் தரையில் ஒரு கல்லும் உள்ளன. கிழக்குப் பகுதியிலுள்ள கற்பலகையில் இடுதுளை ஒன்று வட்ட வடிவில் அமைந்துள்ளது. இந்த இடுதுளையுடன் உள்ள நீண்ட வாயில் பகுதி ஒன்றுக்கு மேற்பட்ட கற்பலகைகளைக் கொண்டு உள்ளது. வாயில் மூடுகல்லால் மூடப்பட்டுள்ளது.

இந்தக் கல்லறையைச் சுற்றிலும் வட்ட வடிவில் கற்களைக் கொண்டு சுவர் போன்ற கட்டட அமைப்பு உள்ளது. கற்சுவரின் 8 கல்வரிசைகள் நல்ல நிலையிலுள்ளன. மேற்குப் பகுதியிலுள்ள இதைத் தவிர மற்ற பகுதிகள் இடிபாடுகளுடன் காணப் படுகின்றன. கற்சுவர் மூடுகல் வரையில் உயர்த்திக் கட்டப் பட்டுள்ளது.

பாறையைத் தவிர மண் கலந்த பகுதியில் ஒரு வகையான கல்திட்டைகள் உள்ளன. இக்கல்திட்டையிலுள்ள கல் அறைகளின் கற்பலகைகள் மண்ணில் பாதிப் பகுதியும், மேல் பகுதியில் பாதி பகுதியும் தெரியும் வண்ணம் அமைந்துள்ளன. பெரிய உருண்டை யான கற்களைக் கொண்டு வந்து இதைச் சுற்றிலும் வட்ட வடிவில் கல்வட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்வட்டத்தில் மற்ற கல்திட்டைகளைப் போலல்லாது இயற்கையாகக் கிடைத்த கற்களைக் கல்வட்டத்தில் பயன்படுத்தியுள்ளனர்.

சிலவற்றில் கல்வட்டங்கள் இன்றித் தனித்தும் உள்ளன. இவற்றிலிருந்து கருப்பு சிவப்புப் பானை வகையைச் சார்ந்த சின்னங்கள், குடுவைகள், சிவப்பு நிறத் தாங்கிகள் போன்றன கிடைத்துள்ளன. இரும்புப் பொருட்கள் கிடைக்கவில்லை என்பது தெரிய வருகின்றது. மூன்று கால்களுடன் கூடிய சிவப்பு நிறச் சாடி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.[4]

பெரிய கல்திட்டையைச் சுற்றிச் சிறிய கல்திட்டைகள் சுமார் 10க்கு மேற்பட்டவை ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. பெரிய கல்திட்டை அமைப்பிலும் அளவில் மற்றவற்றை விடப் பெரியதாகவும் உள்ளது. இந்த கல்திட்டைகளில் கிழக்கு பக்க இடுதுளைகள் உள்ளன எனவே கல்திட்டையில் இடுதுளை எந்தப் பக்கத்திலும் இருக்கலாம் என்ற கால வரையறை வருவதற்கு முன் எடுக்கப்பட்டவை என்பது தெரிய வருகின்றது.

தமிழகத்தில் செய்யப்பட்ட பெருங்கற்படை அகழாய்வுகளில் பெருங்கற்காலப் படையின் காலம் கி.மு. 1000 என்றும் இவை கர்நாடகத்தில் கிடைக்கின்ற பழமையான பெருங்கற்படையைப் போன்று உள்ளன என்பதும் பௌத்த விகாரங்கள் இதை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டன என்பதும் ஒப்பாய்வு செய்யத்தக்கது.

அமைப்பு

1. கல்திட்டைகள் குன்று அகன்ற பாறைகளின் மேல் அமைக்கப் பட்டுள்ளன.

2. கல்அறையைச் சுற்றிலும் வட்ட வடிவில் ஒன்று அல்லது இரண்டு சுற்றுச் சுவர் போன்று கற்பலகை வட்டங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மேல்பாகம் அரை வட்ட வடிவ அமைப்பும், சதுர அமைப்பும் மாறி மாறி உள்ளன.

3. தாங்கு சுவர்கள் கல்லால் எடுக்கப்பட்டுள்ளன. கற்கள் செவ்வகம், சதுரம் ஆகிய அமைப்புகளில் பயன்படுத்தப் பட்டுள்ளன. கொடுமணல் அகழாய்வில் கல்லறையில் காணப் படும் தாங்குசுவர் (Butteress wall) இதிலிருந்து வேறு படுகின்றது.

4. கட்டடக் கலையின் தொடக்கம் கல்திட்டைகளில் காணப் படுகின்றது. கற்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள முறை இட்டர் முறையில் அமைந்துள்ளது. இம்முறை பின்பற்றப் பட்டுள்ளதால் சுவரின் பகுதிகள் இன்று நல்ல நிலையில் உள்ளன.

5. கற்களுக்கு இடையில் சாந்து போன்றன பயன்படுத்தப் பட்டுள்ளன.

மேற்கண்ட கட்டடக் கலையின் அமைப்பைக் கொண்டு தமிழகத்தில் கட்டடக் கலை, பெருங்கற்படையிலிருந்து தொடங்கி வளர்ந்து வந்துள்ளது என்று கருதலாம்.

---

1. K.V. Soundrarajan, Glimpses of Indian Culture. History and Archaeology, p. 144.
2. இப்பகுதியில் நேரடியாக களஆய்வு மேற்கொண்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.
3. K. Rajan, Archaeology, Principles and Methods, p. 166.
4. தினமலர் நாள் இதழ் - 10.9.1986.

தொல்லுயிரியல் படிவப் பகுதிகள் கண்டுபிடிப்பு

நம் துறை இவ்வாண்டு (2005 - 06) அகழாய்வு செய்ய திட்டமிட்டுள்ள பரிகுளத்திலும், அதனை சுற்றியுள்ள அரும்பாக்கம், அரியத்தூர், இரங்காபுரம், நம்பாக்கம், சென்றாயன்பாளையம், மேட்டுப்பாளையம், தோமூர், புதூர், நாராயணபுரம், ஒதப்பை, கிருஷ்ணாபுரம் நெய்வேலி, மயிலாப்பூர். மாளந்தூர், கச்சூர், கூனிபாளையம், கம்மவாரிபாளையம், நெல்வாய் ஆகிய ஊர்களிலும் இதுவரை மேற்பரப்பு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வுப் பணியினை துறையின் சிறப்பு ஆணையர் அவர்கள் 6-8-2005 அன்று ஆய்வு செய்தார்கள். இதில் மேட்டுப்பாளையம் என்னும் ஊருக்கருகில் உள்ள ஓட்டேரி ஓடையின் படுக்கையில் (Stream bed) மரம் மற்றும் எலும்புகள் பதிந்துள்ள தொல்லுயிரியல் படிவப் பகுதிகள் (Fossil Portions) இரண்டு கண்டுபிடிக்கப்பட்டன. இவை இப்பகுதியின் தொல்பழங்கால வரலாற்றை மேலும் சிறப்பிக்கும் ஓர் அரிய சான்றாகக் கருதப்படுகிறது. இத்தொல்லுயிரியல் படிவங்கள் தற்போது தமிழ்நாடு அரசு நிலவியல் துறை மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த மேற் பரப்பு ஆய்வை து. துளசிராமன், காப்பாட்சியர், பூண்டி, கி. சு. சம்பத், கல்வெட்டாய்வாளர், சென்னை மற்றும் ஸ்ரீ. ஸ்ரீகுமார், தொழில்நுட்ப உதவியர் ஆகியோர் மேற்கொண்டனர்.

10

பழவேற்காடு

ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்லியல் அலுவலர், சென்னை.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் பழவேற்காடு என்ற ஊர் வரலாற்றுச் சிறப்புடைய ஊராகும். கடற்கரையையொட்டிய இவ்வூரில் பழைமையான கோயில்களும், கிறிஸ்துவ தேவாலயங்களும், பள்ளிவாசல்களும், சிதைந்த கோட்டையின் இடிபாடுகளும் கல்லறைகளும் உள்ளன.

பழவேற்காட்டையொட்டிய கோவிலடி என்ற தீவில் சோழர் காலத்தைச் சேர்ந்த சிந்தாமணீஸ்வரர் கோயில் உள்ளது. இங்குள்ள 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டின் மூலம், பாண்டிய நாட்டுக் கோட்டாறு (நாகர்கோயில்) ஊர்ப்பகுதியைச் சேர்ந்த பட்டாலகன் என்பவன் திருப்பகவன்துறை இறைவனை மீண்டும் பிரதிஷ்டை செய்துள்ளான் எனத் தெரிகிறது. திருப்பகவன்துறையானது 'மேற்கடல் கோகர்ண சமாநமாகிய கீழ்க்கடல் தீர்ந்தமாந திருப்பகவன் துறை' என்று சொல்லப்படுகிறது. மேற்கடல், கீழ்க்கடல் என்ற குறிப்பால் புவியியல் அறிவு கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்துள்ளது தெரிகிறது. ஆரணியாற்றங்கரையில் வழிபாட்டிற்குப் பட்டாலகன் நிலங்கள் வாங்கி வழங்கியுள்ளான்.

இளநிரவி சதுர்வேதி மங்கலத்துச் சபையாரிடம் நிலங்கள் விலைக்கு வாங்கப்பட்டன. இளநிரவி - வணிகர் கூட்டத்தைக் குறிக்கும் சொல் லாகும். விஜயநகர அரசர் காலத்தில் பழவேற்காடு என்ற பெயர் 'அனந்தராயன் பட்டணமான பழவேற்காடு' என வழங்கப்பட்டுள்ளது. பழவேற்காட்டில் தோங்கு கப்பல் என்ற சீனக் கப்பல்கள், துணி முதலிய சரக்குகளை ஏற்றிச் சென்றுள்ளன. இச்சொல் ''த்ஜோங்கு'' என்ற ஜாவா மொழிச் சொல்லின் திரிபாகும்,

பழவேற்காட்டில் உள்ள ஆதிநாராயணசாமி கோயிலில் உள்ள 16-ஆம் நூற்றாண்டுத் தெலுங்குக் கல்வெட்டில், ஊர்ப் பெயர் பிரளய காவேரி என்று கூறப்பட்டுள்ளது. மல்லப்பட்டணம் என்ற பெயரும் இருந்துள்ளது.

பழவேற்காடு என்ற பெயர் ஐரேப்பியரால் உச்சரிக்க முடியாமல் புலிக்காட் என்று உச்சரிக்கப்பட்டு அதுவே ஆவணங்களில் இடம்பெற்றுவிட்டது. பழைய + வேல் + காடு பழவேற்காடாயிற்று.

வேலமரங்களின் அடிப்படையில் சென்னையில் திருவேற்காடு ஏற்பட்டது போல் இப்பெயரும் ஏற்பட்டது எனலாம்.

பழவேற்காடு கைபீது என்ற ஆவணமும், ஜூலியன் காட்டன் என்பவரால் தொகுக்கப் பெற்ற List of Inscriptions on Tombs or Monuments in Madras என்ற நூலின் இரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ள தகவல்களும் இவ்வூரில் உள்ள கல்வெட்டுகளும் தகவல்களும் சிற்பங்களும் பழவேற்காட்டின் வரலாற்றிற்கு ஆதாரங்களாக உள்ளன.

கல்வெட்டு இதழ் 65-இல் இவ்வூர்க் கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்ட விவரமும் முக்கிய செய்திகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆதிநாராயண பெருமாள் கோயில்

ஆதிநாராயணர் கோயில் சிதைந்த நிலையில் மரங்களும், புதர்களு மாக உள்ளது. கல்வெட்டு, சிற்பம், கட்டடக்கலை என மூன்றினாலும் சிறப்பெய்திய இக்கோயில் முன்மண்டபம், மகாமண்டபம், கல்யாண மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு கிழக்கு நோக்கி உள்ளது. பங்கஜ வல்லி அம்மனுக்குத் தனியாகச் சன்னிதி உள்ளது. அம்மன் கோயில் கட்டியதும், கல்யாண மண்டபம் கட்டியதும் ஒரு தெலுங்குக் கல்வெட்டின் மூலம் உறுதியாகிறது. காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண் டாகும். பாலவந்தகுலு என்பவர் கட்டியுள்ளார். செம்புரைக் கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தூண்களிலும் விதானத்திலும் புராணச் சிற்பங்கள் உள்ளன. பழவேற்காடு கைபீது என்ற நூல் வலங்கையர் பராமரிப்பில் இக்கோயில் இருந்ததாகக் குறிப்பிடுகிறது, யாருடைய பொறுப்பிலும் இல்லாத இக்கோயிலைத் தொல்லியல் துறையின் உதவி யுடன் பராமரிக்கலாம் என்று துறைச் சிறப்பு ஆணையர் வருவாய்த்துறை அலுவலர்களிடம் குறிப்பிட்டார்கள்.

சாம ஈஸ்வரர்

ஆனந்தவல்லி சமேதரான சாமஈஸ்வர சுவாமி கோயில் விஜயநகர அரசர் காலத்தில் கட்டப்பட்டது. கோயிலில் கற்சிற்பங்கள் உள்ளன. கோயிற் கிணற்றில் உள்ள படிக்கட்டில் 'பிலவ வருஷம் ஆனி மாதம் 5-ஆம் தேதி இரு செட்டியார்கள் நடை பாவி கட்டிய விபரம் உள்ளது. இராமாயணக் கதையை விளக்கும் சிற்பங்களும், அனுமனின் பல்வேறு உருவங்களும் மனுவின் கதையை விளக்கும் காட்சிகளும் இங்குள்ளன.

சுப்பிரமணியர் கோயில்

பழவேற்காட்டில் உள்ள சுப்பிரமண்யர் கோயில் கி.பி. 1895-இல் செட்டியார்கள் பலரின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பழவேற்காடு, 'பழுவை' என இங்குள்ள கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

டச்சுக்காரருடைய கோட்டை கி.பி. 1609-இல் கட்டத் தொடங்கி 1610-இல் முடிந்தது. கட்டியவர் Geldria ஆவார். பக்கிங்காம் கால்வாய் கிழக்குப்பகுதியில் செல்கிறது. கால்வாய் நீர், கோட்டைக்குள் புகாதவாறு தடுப்புச் சுவர் கட்டப்பட்டது. P. E. Van Hogan drop என்பவர் கட்டியுள்ளார்.

பழவேற்காட்டிற்கு வடக்கில் கோட்டைக்குப்பம் பகுதியில் கத்தோலிக்க தேவாலயம் உள்ளது. கி.பி. 1614-இல் பீட்டர் பால் பிளக்கர்மென் (Peter Paul Flagrman) என்ற ஹாலந்து நாட்டுப் பாதிரியின் மேற்பார்வையில் கட்டப்பட்டது.

1656-ஆம் ஆண்டுக்குரிய கல்லறைகள் (Tomb Stones) கல்வெட்டுகள் (டச்சு மொழியில் கூடியவை) மற்றும் சிற்பங்களுடன் காட்சியளிக்கின்றன. இதன் வாயில் உரோமானிய பாணியில் அமைந்து வில் வட்ட வடிவில் உள்ளது. இருபுறமும் கல் சிற்பங்கள் உள்ளன. ஜோஅனஸ் வெர்கர்க் (Joanns Verkerk) என்ற கல்லறை, முன் குறிப்பிட்ட மாதா கோயிலைச் சுட்டுகிறது. மரங்களால் சூழப்பட்ட மாதா கோயிலுக்கு முன்னால் பாதிரியார் ஒருவர் முழங்காலிட்டு வணங்கும் நிலையில் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளார்.

ஆப்பிரகாம்மெனேஸ் (Abraham Menois) என்பவரின் கல்லறையில் காணப்படும் சிற்பம் கி.பி. 1684-இல் இருந்த கோட்டையின் வடிவத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. கோட்டையின் மேல் மாடத்தில் டச்சுக் காரர்கள், பெண்களுடன் நிற்கும் தோற்றமும் நகர மக்களின் வீடுகளும் காட்டப்பட்டுள்ளன.

பழைய கலங்கரை விளக்கம் 1859-இல் கட்டப்பட்டது. 56 மீட்டர் உயரம் கொண்டது. சார்லஸ் டிலோன் (Charles Delon) என்பவரின் கல்லறை 14-8-1800- க்குரியதாகும். இவர்தாம் சென்னையில் அச்சுக் கலையை அறிமுகப்படுத்தியவர். ஊரின் தெற்கே மசூதி உள்ளது. முன்புறம் திறந்தவெளியில் நிழற்கடிகாரம் உள்ளது. சூரிய வெளிச்சத்தின் நிழலைக் கொண்டு காலம் கணிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கால எண்களைக் குறிக்கும் இரும்புத் தகடு உயர்ந்த பீடத்தின் மீது உள்ளது. தகட்டின் நடுவில் 1.5 செ.மீ. அகலம், 3 செ.மீ. உயரமுள்ள இரும்புத் துண்டு பொருத்தப்பட்டுள்ளது.

கரிமணல் என்ற சிற்றூர் பழவேற்காடு ஒட்டிய தீவில் உள்ளது. வேனிற்காலத்தில் ஐரோப்பியர் இங்கே தங்கியுள்ளனர்.

சோனர்களுடைய மசூதிகள் (பெரிய பள்ளி, சின்னப்பள்ளி, ஹாஜி பள்ளி) தொன்மை வாய்ந்தவையாகும். பழவேற்காடு கைபீது இவ்வூரின் வரலாற்றைக் குறிப்பிடுகிறது.

எருக்கங்காடாயிருந்த இடத்தை அழித்து ஊர் உண்டாக்கினர். சந்திரகிரியின் கட்டுப்பாட்டில் முதலில் இப்பகுதி இருந்தது. பின், கோல்கொண்டா கட்டுப்பாட்டில் இருந்தபோது ஹாலந்துக்காரர் அங்கு சென்று அனுமதி பெற்று வியாபார ஸ்தலமாக்கிக் கோட்டை கட்டினர். பல்வேறு சாதியார்களும் இங்கு வாழ்ந்தனர். வியாபார ஸ்தலமாக விளங்கியது. கி.பி. 1795-இல் கோட்டை ஆங்கிலேயர் வசமான பின் பல பீரங்கிகள் அழிக்கப்பட்டன. கோட்டையும் சிதைக்கப்பட்டது. 1805 முதல் நாடு விடுதலையடையும் வரை ஆங்கிலேயர் பொறுப்பில் பழவேற்காடு இருந்துள்ளது.

---

1. செங்கை மாவட்ட கருத்தரங்கு - பதிப்பாசிரியர் : இரா. நாகசாமி இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத் துறை, 1976.
2. கல்வெட்டு இதழ் - 65
3. Inscriptions on Tombs in and around Madras - James Julion Cotton.

கருங்கல் நீர்த்தொட்டிக் கல்வெட்டு

கரூர் மாவட்டம், கரூர் வட்டம், சாலப்பட்டி என்ற கிராமத்தில் S. மருதை ரெட்டியார் தோட்டத்தில் கருங்கல் தொட்டிகள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்றில் கல்வெட்டுப் பொறிப்புகள் காணப்படுகின்றன.

கல்வெட்டு

1. கலியுகம் சகூகூ௰௩ மேல் செல்ல
2. ா நின்ற பிலவ ஸ்ரீ ஆவணி மீ" (பொ)ற
3. நியில்யிருக்கும் எறுட்ட ரெ
4. டிய(ா)ர் பொஞ்ச(ா)தி எறும்ம (ய)
5. (மா)ள் செய்து வயித்த உபையம்

கி.பி. 1541 - ஆம் ஆண்டு ஆவணி மாதம் பொரணியிலிருக்கும் எறுட்ட ரெட்டியார் மனைவி எறுமையம்மாள் என்பவர் இக்கருங்கல் நீர்த்தொட்டியை செய்தளித்துள்ளார். இக்கருங்கல் நீர்த்தொட்டி நீர் நிலையற்ற வறட்சியான பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. இத்தொட்டியுள்ள தோட்டத்தில் மட்டும் கிணற்றில் நீர் உள்ளது. கி.பி. 16 - ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் கால்நடைகளின் தாகத்தை தீர்ப்பதற்கு இக்கருங்கல் நீர்த்தொட்டி செய்தளித்திருக்கலாம். கி.பி. 17 - ஆம் நூற்றாண்டில் மதுரை நாயக்கப் பேரரசி மங்கம்மாள் தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் அனைத்திலும் சாலைகள் அமைத்து, சாலைகளில் மடங்களையும் நிழல் தரும் மரங்களையும் ஆற்றின் குறுக்கே பாலங்களையும் ஏற்படுத்தி, வழிப்போக்கர்களின் பசியையும், தாகத்தையும் பிணியையும் தீர்த்து வைத்ததை வரலாற்றில் காண முடிகிறது. நாயக்கர் ஆட்சிக் காலத்தில் இத்தகைய நற்செயல்கள் பரவலாக ஊக்குவிக்கப்பட்டதின் வெளிப்பாடே இக்கருங்கல் நீர்த்தொட்டி செய்தளித்தமையாகும். கல்வெட்டு முனைப்புத் திட்ட பணியின் பொழுது கரூர் காப்பாட்சியர் நாக கணேசன் அவர்களால் இக்கருங்கல் நீர்த்தொட்டிக் கல்வெட்டு கண்டறியப்பட்டது.

11

தரங்கம்பாடி வணிகர்கள்

எஸ். இராமச்சந்திரன்
கல்வெட்டாய்வாளர், சென்னை

நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையில் அமைந்துள்ள கடற்கரைச் சிற்றூர் தரங்கம்பாடி. இவ்வூர் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டிலிருந்து 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் சோழமண்டலக் கடற்கரையில் முதன்மை யான ஒரு துறைமுகமாகத் திகழ்ந்துள்ளது. தரங்கம்பாடிக் கடற்கரையில் அமைந்துள்ள மாசிலாநாதர் கோயிற் கல்வெட்டு ஒன்றின் மூலம், இவ்வூர் ''சடங்கன்பாடி''யென்று பெயர் பெற்றிருந்ததென்றும், 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ''குலசேகரன் பட்டினம்'' என்ற பெயரும் இத்துறைமுக நகருக்குச் சூட்டப்பட்டிருந்தது என்றும் தெரிகிறது. மேலும் இத்துறைமுக நகரில் ''பதினெண்மிஷயத்தார்'' என்ற வணிகர்களும், ''கரையார்'' என்ற துறைமுகப் பணியாளர்களும் (Stevedores) வாழ்ந்தனர் என்றும் அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.[1] தரங்கம்பாடிக்கு அண்மையிலுள்ள திருக்கடவூர் காலகாலசுவாமி கோயிலிற் காணப்படும் சமகாலக் கல்வெட்டு ஒன்று, ''குலசேகரன் பட்டினத்து வியாபாரி''களைக் குறிப்பிடுகிறது.[2]

தரங்கம்பாடிக்குச் சற்றுத் தொலைவில், உள்நாட்டில், சங்கரன் பந்தல், மன்னம் பந்தல் என்ற ஊர்கள் உள்ளன. ''பந்தர்'' என்ற சொல் வணிகச்சாலை அல்லது முத்துக்குளிக்கும் துறைமுகம் என்ற பொருளில் பதிற்றுப்பத்தில் ஆளப்பட்டுள்ளது.[3] மேலும் ''சங்கரன்'' என்ற சொல் கலப்பினத்தவராகிய வணிகர் களைக் குறிப்பதாக இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது. அதேபோல், நிறுத்தும் அளந்தும் பண்டங்களை விற்பனை செய்வோர் ''மன்னபர்'' என அழைக்கப்பட்டதாக நீதிவாக்யாம்ருதம் என்ற சமஸ்கிருத நூலின் மூலம் அறிகிறோம்.[4] எனவே மேற்குறித்த ஊர்ப்பெயர்கள் சங்கரன் பந்தர் என்றும் மன்னபன் பந்தர் என்றும் இருந்திருக்க வாய்ப்புண்டு. இன்று இவ்வூர்களில் இஸ்லாமிய வணிகர்கள் வாழ்கின்றனர்.

தரங்கம்பாடியிலும் சுற்று வட்டாரத்திலும் ''சேனைத் தலைவர்'' என அழைக்கப்படும் வணிகப் பிரிவினர் வாழ்கின்றனர்.

செட்டியார் என இப்பகுதியில் பட்டம் சூட்டிக் கொள்கின்றனர். டென்மார்க் நாட்டுக் கிழக்கிந்தியக் கும்பினியார் தரங்கம்பாடியில் குடியேறி, கோட்டைகட்டி வாணிகம் செய்து வந்த காலத்தில் (கி.பி. 1620 முதல் கி.பி. 1844 வரை) இவ்வினத்தவரின் பலர் பாய்மரக் கப்பல்கள் வைத்து வாணிகம் செய்து வந்தனர் என்பதற்கு ஓலைச் சுவடிச் சான்றுகள் உள்ளன. 18, 19 - ஆம் நூற்றாண்டுகளில் மொரீஷியஸ், சிஷேல்ஸ் முதலான பல தென்னாப்பிரிக்க நாடுகளில், தரங்கம்பாடியிலிருந்து சென்று, இவ் இனத்தவர் பலர் குடியேறினர். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தியடிகளின் நெருங்கிய நண்பராகத் திகழ்ந்த தில்லையாடி கன்னியப்ப செட்டியார், பொறையாறு பாலகுரு செட்டியார் ஆகியோர் இவ்வினத்தவராவர். தென்னாப்பிரிக்க இனவெறிப் பூசலில் துப்பாக்கிக் குண்டுகளைச் சந்தித்த தில்லையாடி நாகப்பன், வள்ளியம்மை போன்ற தியாகி களும் சேனைத் தலைவர் இனத்து வியாபாரிகளால் குடியேற்றப் பட்டவர்களாவர்.

சேனைத் தலைவர் இனத்தவர் வெற்றிலை பயிரிடும் தொழில் புரிந்து வந்ததாகவும் ''இலை வாணிகர்'' என அழைக்கப் பட்டதாகவும் தமிழகக் கல்வெட்டுகள் சிலவற்றால் அறிய முடிகிறது. இவர்களைச் ''சேனையங்காடியார்'' எனத் திருப்பதிக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.[5] தரங்கம்பாடிக் கல்வெட்டுகளைப் பொறுத்தவரை, கி பி. 1567 - ஆம் ஆண்டுக் கல்வெட்டில் ''சேனைக் கைக்கோளர்'' என்றும் கி.பி. 1783 - ஆம் ஆண்டுக் கல்வெட்டில் ''சேனைக் குடை[யார்]'' என்றும் அழைக்கப்பட்டுள்ளனர்.[6] ஆயினும் இவர்கள் வெற்றிலை பயிரிடும் தொழில் செய்து வந்த தாகக் கருதத்தக்க குறிப்பு ஏதும் இல்லை.

கி.பி. 7 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதத்தகும் பெருங்கதையில் ''செருவார் சேனைப்பெருவாணிகன்'' என்பவனைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.[7] மேலும், யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை வீரர்களுக்கு இறைச்சி கலந்த உணவை நாள்தோறும் அளித்து வரும் பணி சேனைவாணிகம் என அழைக்கப்பட்டதெனவும் பெருங்கதை தெரிவிக்கிறது.[8] எனவே சேனைவணிகர்கள் படைகளுடன் சென்றவர்கள் என்பது புல னாகும். Commissariat என்ற ஆங்கிலத்தில் வழங்கும் பொறுப்புக்கு நிகராக இதனைக் கருதலாம்.[9]

இக்கட்டுரையின் தொடக்கத்தில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தரங்கம்பாடியில் "பதினெண்மிஷயத்தார்" என்றழைக்கப்பட்ட வணிகர்கள் வாழ்ந்ததாகக் கல்வெட்டு குறிப்பிடுவதைக் கண்டோம். அக்கல்வெட்டில், பதினெண்மிஷயத் தாரும் கரையாரும் சேர்ந்து, தரங்கம்பாடிச் சிவன் கோயிலில் "வீரகற்பகன் சந்தி" என்ற நித்திய உற்சவத்துக்கு ஏற்பாடு செய்த குறிப்பும் உள்ளது.[10] இப்பொழுது தரங்கம்பாடியில் உள்ள சேனைத் தலைவர் இனத்தவரின் குலதெய்வமாகக் "கற்பக விநாயகர்" என்றழைக்கப்படும் விநாயகரின் கோயில் ஒன்று உள்ளது. இக்கற்பக விநாயகரை "வீர கற்பக யானை" என்று, கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதத் தகும் "தரங்கை வீர வேலாயுதசாமி பிள்ளைத் தமிழ்" என்ற நூல் அழைக்கிறது.[11] எனவே இக்குறிப்புகளைத் தொடர்பு படுத்திப் பார்க்கும் பொழுது, வீரகற்பக விநாயகர் என்றழைக்கப் பட்ட இத்தெய்வத்தின் பெயரால் நித்திய உற்சவத்துக்கு ஏற்பாடு செய்த பதினெண்மிஷயத்தார், இச்சேனைத் தலைவர் இனத்தவர் களாகவே இருக்க வேண்டும் எனத் தெளியலாம். சேனைத் தலைவர் அல்லது சேனைக் குடையார் இனத்து வணிகர்கள் பற்றியும், சங்ககாலப் புகார் நகர வரலாற்றுடனும், இடைக்காலச் சடங்கன்பாடி (தரங்கம்பாடி)யின் வரலாற்றுடனும் இவ்வினத்தவர் கொண்டிருந்த தொடர்பு பற்றியும் விரிவாக ஆய்வு செய்யலாம்.

---

1. S.I.I. Vol. IV no. 399. "பதினெண் மிஷயத்தார்" என்பது "பதினெண் விஷயத்தார்" என்பதன் திரிபாக இருக்க வேண்டும்.
2. நேரில் படிக்கப்பட்டது. குறிப்பு: A.R.E. 51/1906.
3. "பந்தாப்பபந்த பலர் புகழ் முத்தம்" - பதிற். 74. இச்சொல் அரபு மொழியில் இன்றும் வழங்குகிறது.
4. Mishra, B.B., "Polity in the Agni Purana", Punthi Pustak Calcutta, 1965, p. 63.
5. T.T.D. Epgl. Series - Vol. I. No. 100.
6. S.I.I Vol IV. Nos. 401 & 400.
7. பெருங்கதை 1 : 40 : 344.
8. அதே நூல் 3 : 26 : 97-98.
9. French - English Dictionary.
10. S.I.I. vol. IV. No. 399.
11. தரங்கை வீரவேலாயுத சாமி பிள்ளைத்தமிழ்-தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு-10 ஆண்டு : 1950, பா. 2.

திருவள்ளூர் மாவட்டம்
மேட்டுப்பாளையம் ஓட்டேரி
ஓடையில் கிடைத்த தொல்லுயிரியல்
படிவங்கள். (Fossils)

குதிரை குத்திப்பட்டான் -
நடுகல், தோகை மலை,
கரூர் மாவட்டம்.



நிர்மால்யத்தொட்டி
- கல்வெட்டு
நென்மேனி,
சிவகங்கை
மாவட்டம்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் எஸ். சுப்பிரமணிய அய்யர் அறக்கட்டளைச் சொற்பொழிவில் 9-11-2005 அன்று "Archaeology of Tamilnadu as revealed by excavations" என்னும் தலைப்பில் சிறப்பு ஆணையர் திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப., அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

பரிக்குளம் படிவுப்படுகையின் (deposital terrace) **படிவு அடுக்குகளைச் சிறப்பு ஆணையர் அவர்கள் பார்வையிடுகிறார்**